வெற்றிமணி வெளியீடு 35
Free Circulation

# சிவத் தமிழ்

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

2022



சிவபூமி
**திருக்குறள் வளாகம்**

**இடரும் இறை வழிபாடும்**

செஞ்சொற் செல்வர் கலாநிதி
**ஆறு. திருமுருகன்**
அவர்களின்
## மணிவிழா சிறப்பிதழ்

அகமும் புறமும் ஆலயம் அமைப்போம்



# சிவபூமி
# திருக்குறள் வளாகம்







## சிவபூமியில் தொடர் பணிகளாய் திருக்குறள் வளாகம்

25.10.2021 அன்று காலை 10.00 மணிக்கு "சிவபூமி திருக்குறள் வளாகம்" அடிக்கல் நாட்டு வைபவம் "இந்துநெறிச்சக்கரவர்த்தி" "செஞ்சொற்செல்வர்" கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை சிவபூமி அறக்கட்டளையின் தொடர்பணிகளில் இப்பணியும் ஒன்றாக இன்று அடிக்கல் நாட்டி சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் ,அவுஸ்ரேலியாவில் வாழ்பவருமான, வைத்திய நிபுணர் கமலாகரன் அவர்களின் பேருதவியில் இப்பாரிய திருப்பணி நடைபெறவுள்ளது.

திருக்குறள் முழுவதும் காட்சிப்படுத்துவதுடன், திருக்குறள் ஆய்வு நூலகம்,மற்றும், திருக்குறள் ஆய்வு அரங்கம், தியான நிலையம் எனப்பல விடயங்கள், மக்கள் பயன் பெறும் வகையில் அமைக்கப்படவுள்ளது.

"திருக்குறள் வளாகம்" திருவருள் துணையுடனும், நன்மக்களின் கொடையுடனும் இனிதாக நிறைவுற சிவத்தமிழ் வாழ்த்துகின்றது.

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

மலர் 18 2022 இதழ் 35

18 வது ஆண்டில் சிவத்தமிழ்...

ஆரம்பம் 2004

பிரதம ஆசிரியர்
கலைஞானமணி
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
0049 163 199 2333
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
ஆன்மீகத்தென்றல்
த.புவனேந்திரன்

கௌரவ ஆசிரியர்
கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்
"இலக்கியச் செம்மல்"
இந்து மகேஷ்

Layout Design:
M.K.S. Sivakumaran

Published by
Vettimaniy Ltd U.K


## மணிவிழா சிறப்பிதழ்



செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு.திருமுருகன்
அவர்களின்
மணிவிழா சிறப்பிதழ்





# மணிவிழாக்காணும் சிவபூமி மைந்தன்
# கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களை
# சிவத்தமிழ் மகிழ்ந்து போற்றுகிறது!






## ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!!!

தாய்வீடான அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், உன் உள்ளத்தை பண்படுத்தியதைச் சொல்வா! சிவபூமி கொடுத்த நல் வரங்களைச் சொல்வா! நாய்களுக்கும் சரணாலயம் அமைத்த ஜீவகாருண்யத்தைச் சொல்வா! ஆறு போல ஓடும் ஆறு.திருமுருகனின் அழகிய நீண்ட சொற்பொழிவுப் பயணங்களைச் சொல்லவா!

திரு முருகா! எதனைச் சொன்னாலும், மலைபோல் உன்பணியில் ஏதும் ஒன்றேனும் சொல்லாது விடுபடும் அளவிற்கு உன்பணிகள் குவிந்துள்ளன.

புள்ளிபோட்டு குறித்த பணிமுடிக்கும் உன் ஆற்றலுக்கு, இல்லாத ஒன்று முற்றுப் புள்ளி மட்டும்தான்.
சிவபூமி முதியோர் இல்லம். சிறுவர் மனவிருத்திப்பாடசாலை, திருவாசக அரண்மனை, அரும் பெரும் காட்சியகம். கந்தபுராண ஆச்சிரமம், அபயம் இலவச மருத்துவ சேவை, சிவபூமி கோசாலை, நாய்களின் சரணாலயம், இப்படி தொடரும் உன் சேவைகள் அதனால்தான் சொன்னேன் உனக்கு முற்றுப்புள்ளி கிடையாது என்று.

வடக்கு நோக்கி மட்டுமல்ல,கிழக்கிலும் உதிக்கும் உன் பணிகள். நீ பிரதேசங்களுக்கு அப்பாற்பட்டவன். அரசியல் சாயம் பூசாதா திரு நீறு பூசும் தூய நெற்றிக்கும் பரந்தசேவைக்கும் சொந்தக்காரன். அறப்பணியாளன் ஆறு.திருமுருகன்.
அறுபது வயது யாவருக்கும் வருவதுதான். சிலருக்குத்தான் மணிவிழாவாக மணியோசை கேட்கும்.
சிவபூமி மைந்தனே! எடுத்தகாரியத்தை அவனருளோடு செய்து முடிக்கும் வெற்றி வேலனே! செஞ்சொற் செல்வரே!! ஆறு.திருமுருகனே!!!
வெற்றிமணி பத்திரிகையும், சிவத்தமிழ் சஞ்சிகையும் இணைந்து, உங்கள் பணிகள் என்றும் தொடரவும், வாழ்வு அருள் ஒளியால் பிரகாசம் பெற்றிடவும், மணிவிழாப் பொழுதினில் **(28.05.2021)** வாழ்த்தி வணங்குகின்றது. உங்களை பெற்றவர்கள் மட்டும் அல்ல, எங்களைப் பெற்ற சிவபூமியும் உங்களால் பெரும் பேறு பெற்றது என்பதும் உண்மையே!

### முழுமையாக வரிசைப்படுத்த இயலாத அளவு அவர் பணிகள் தொடர்கின்றன....

01.சிவபூமி முதியோர் இல்லம்.
02.திருவாசக அரண்மனை
03.அரும் பெரும் காட்சியகம்.
04.கந்தபுராண ஆச்சிரமம்
05.சிவபூமி கோசாலை
06.நாய்களின் சரணாலயம்
07.கீரிமலை சிவபூமி ஆச்சிரமம்
08.திருமந்திரம் மூவாயிரம் பாடல்களும் கருங்கல்லில் பதிக்கும் திருப்பணி ஆரம்பம்.
09.தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் வீட்டுத்திட்டம்
இதுவரை 9 வீடுகள் கட்டப்பட்டு,துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வளர்ந்து,திருமணமான குடும்பப் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
10.சிவபூமி திருக்குறள் வளாகம்...இதனை எழுதிக்கொண்டு இருக்கும்போதே இலக்கும் இலக்கமும் 25 ஐக் கடந்திருக்கும்.
ஆறு.திருமுருகன் சேவை என்றும், ஏறுமுகமாக, இருக்க சிவத்தமிழ் வாழ்த்துகின்றது.
அன்புடன்
**மு.க.சு.சிவகுமாரன்,**
பிரதம ஆசிரியர்: வெற்றிமணி-சிவத்தமிழ்- யேர்மனி.



# அதுவும் ஜீவகாருண்யமே!

மாதவி

தினமும் காலையோ மாலையோ சூரியன் அழைத்தால் உடன் புறப்பட்டு செல்ல ஒரு ஆற்றங்கரை. எனது இல்லத்திற்கு மிக அருகில் உள்ளது.

ஆறு என்றதும் தாயகத்தில் மலை உச்சியில் இருந்த வீழ்ந்து பல பாறைகளை மோதி எந்த வித வலியோ சலிப்போ இல்லாமல் ஆடி பாடிப் பாயும் ஆறுபோல் இது எனக் கற்பனை செய்ய வேண்டாம்.

இது செயற்கை ஆறு. பல நூறு வருடங்களுக்கு முன் வெட்டப்பட்டது. ஒரு கப்பல் ஒன்றை ஒன்று விலக்கும் அளவுக்கான அகலம் மட்டுமே.அருகே இரு புறமும் நடை பாதையும் சைக்கிள் பாதையும் உண்டு.

இப்பாதையில் நில்லாமல் ஓடுபவர்கள் அதிகம். அப்படி அவர்கள் நின்றால் அவர்களது நாய் காலைத்தூக்குது என்று அர்த்தம்.

ஆற்றில் அனுமதி பெற்றவர்கள் மட்டும் மீன்பிடிப்பார்கள். பறவைகள் பல நீரிலும் இறங்கும் விமானம் போல் அடிக்கடி இறங்குவதும் ஏறுவதுமாக இருந்தன. இருந்தாலும் வாத்துக்கூட்டமே அங்கு அதிகம்.

ஓடுபவர்களைத் தவிர என்னைப் போல் அமைதியாக நடப்பவர்கள் சிலரும் இருக்கிறார்கள்.
அவர் நடக்கும் போது ஆற்றில் உள்ள தாராக்களுக்கு உணவு கொடுத்தும் மகிழ்வார்கள்.

சிலரைத் தினமும் சந்திப்பதால் எதோ ஒரு உறவு நமக்குள் உருவாகும். முன்பெல்லாம் அதனைக் காதல் என்றுதான் எண்ணுவோம். ஆனால் இப்போ காதலுக்கும் அப்பாலும் அழகான பல உறவுகள் தெரிகின்றது. பலரைத் தினமும் காண்பதால் அவர்கள் புன்சிரிப்போடு நடந்தனர். சிலர் நின்று கதைக்கவும் செய்தனர்.

உங்கள் பிள்ளைகள் எங்கு வேலை செய்கிறார்கள்.
சொந்த வீட்டில் இருக்கிறீங்களா? தனி வீடா அப்பாட்மென்ரா?
கார் என்ன வைத்திருக்கிறீங்கள். நீங்கள் இந்த நாட்டு சிற்றிசனா?
இப்படியான எங்கள் வளமையான பல கேள்விகளில், எந்தக் கேள்வியும் இருக்காது.
யாவும் இயற்கையை ஒட்டியே இருக்கும்.

சரி இப்போ கதைக்கு வருகிறேன்.
ஒருவர் ஆற்றங்கரையில் தாராக்களுக்கு உணவு போட்டுக்கொண்டு இருந்தார்.

என்னைக் கண்டதும் புன் சிரிப்புடன் தாராக்களின் மகிழ்ச்சியைப் பார்த்தீர்களா? தினமும் நான் மீன் பிடித்து வீடு திரும்பும் போது இதனைச் செய்வேன் என்றார்.

உண்மையில் தாராக்கள் நன்றி சொல்வது அதன் சத்தத்தில் தெரியும். எந்த மொழிக்காரருக்கும் புரியும்.
கூட்டமாக ஓடிவந்து உண்ணும் அழகே தனி.

இப்படி ஆர்வமாக உண்கிறதே என்ன உணவு கொடுக்கிறீர்கள் எனக்கேட்டேன்.
உடன் சொன்ன அவர் பதில் என்னை……..!
பதில் இதுதான்:
மீன் பிடிக்க தூண்டிலில் செருகிய உயிர் புழுக்களை, மீன்பிடித்த பின் வீணாக்காமல், தாராக்கு போடுகிறேன் என்றார்.
நான் சட்டென்று சொன்னேன், ஏன் வீண் என்று நினைப்பான், அந்தப் புழுக்களை மீண்டும் மண்ணில் போட்டு வாழ விடுங்களேன்! அதுவும் ஜீவகாருண்யம் தானே என்றேன்.

என்னை யார் என்று தெரியாது! என்ன இனம்!! என்ன மதம்!!! எதும் அறியார்.
பட்டென்று மண்ணைக் கிளறி புழுக்களை போட்டுவிட்டு புன்னகைத்தார்.
இப்படியான புன்னகை மனிதரின் முகத்தில் மிக அரிதாகவே பூக்கின்றது. இதுவும் ஜீவகாருண்யமே!

பக்கத்தில் காத்திருந்த ஒரு பெண் அந்த தாராக்களுக்கு கொடுக்க கைநிறைய தானியங்களுடன் காத்து நின்றாள்.

## மாதா, பிதா, குரு, தெய்வம்.













திருவாசக அரண்மனை

# இடரும் இறை வழிபாடும்



வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

இன்று நாம் அச்சத்துடன் வாழக் காரணமாயுள்ள குரோணா நுண்ணங்கிக்கு எதிராக உலகமெல்லாம் அறைகூவலுடன் செயற்படுகின்றது. இத்தகைய நுண்ணங்கி க்கு எதிரான செயற்பாட்டினை "மூன்றாம் உலகப் போர்" என்றும் சிலர் கூறியுள்ளனர். இந்தக் கிருமிப் போர் பற்றி பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மாணிக்கவாசக சுவாமிகள் குறிப்பிடுகிறார். அவர் பாடிய திருவாசகத்திலே 225 அடிகளிலே பாடப்பெற்ற "போற்றித் திருவகவல்" என்னும் நெடும்பாட்டிலே மனிதப் பிறப்புப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தாயின் கருவிலே தொடக்கத்திலிருந்து எத்தனையோ இடர்களிலிருந்து பிழைத்து அக்கரு குழந்தையாகப் பிறக்கும் வரையான நிகழ்வுகளை மணிவாசகப்பெருமான் மிக நுணுக்கமாகக் கூறுகிறார். அவர் கல்வி கேள்விகளிலே மிகத் தேர்ந்த அமைச்சராக அரிமர்த்தன பாண்டிய மன்னனின் அவையிலே பணிசெய்தவர். "தென்னவன் பிரம்மராயன்" என்னும் மிக உயர்ந்த விருதினைப் பெற்றவர். இதனால் அவர் பக்திப் பாசுரத்திலே அறிவியல் அடிப்படையான கருத்துகளைத் தெளிவாகக் கூறக்கூடியதாயிருந்தது. போற்றித் திருவகவலில் தாயின் கருவிலே முதல் திங்களில் இருந்து கரு தப்பிப்பிழைப்பதை வருமாறு கூறுகிறார்: "மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும் " என்று கூறுகிறார். கருவுக்கும் கிருமிக்கும் இடையே போர் நடைபெறுகிறது என்பதை "கிருமிச் செரு" என்கிறார். செரு என்றால் போர் என்பது பொருள். இப்பொழுது குரோணாவை நாம் திட்டித் தீர்ப்பது போலத்தான் மணிவாசகப்பெருமானும் "ஈனமில் கிருமி" என்கிறார். இப்பொழுது நாம் எதிர்கொண்டிருக்கும் ஈனமில் கிருமியாகிய குறோணாவையும் அகற்றுதற்கு இறை வழிபாடும் நமக்குத் துணை செய்யும் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

இந்தக் குறோணா நுண்ணங்கியால் நாம் இடருற்று வருந்தும் இந்த வேளையில் நமக்கெல்லாம் உறுதுணையாக நின்று மருத்துவர்கள், தாதியர்கள், காவல்துறையினர், படைவீரர்கள், அரச அலுவலர்கள் எல்லோருமே எங்களை இந்த நுண்ணங்கியிலிருந்து காக்கத் துணைசெய்கின்றார்கள். இந்த வேளையில்தான் எங்களைக் காக்கும் இவர்களையும் எங்களையும் காக்க ஓர் இறை இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இத் தொற்று நோய் போன்ற பல இடர்கள் முன்னர் ஏற்பட்டபோது நம்முடைய மூதாதையர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக இறை அருளையும் வேண்டி வழிபாடு செய்தனர்.

குறோணா நுண்ணங்கியின் தொற்று, நீக்கப்படவேண்டிய, முற்றாக இல்லாமலாக்கப்பட வேண்டிய நிலையிலே உள்ளது. இதற்கு 'சமூக இடைவெளி' வேண்டுமென மருத்துவர்களும் நலன்பேணுபவர்களும் திரும்ப திரும்பக் கூறுகிறார்கள். இந்தப் பயிற்சி நமக்கு திருக்கோயில்களிலே 'வழிபாட்டு இடைவெளி ' ஆகத் தரப்பட்டு வந்தது. ஆனால் அதை நாம் முற்றாகப் பின்பற்றாது கைவிட்டோம்.திருக்கோயில்களுக்குள்ளே இறையை வணங்கும்போதோ பிரசாதம் வாங்கும்போதோ ஒருவர்பின் ஒருவராக ஒழுங்காகச் செல்வதற்கு எங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. பின்னாலே நிற்பவர் உயரம் குறைந்தவர், அவராலே கர்ப்பகிரகத்தைப் பார்க்கமுடியாது, அவருக்கும் வழிவிடவேண்டும் என்ற எண்ணமோ எவருக்கும் இல்லை. ஒருவரையொருவர் நெருக்கவும் இடிக்கவும் தள்ளவும்தான் அறிந்துள்ளோம்.
ஒழுங்காக 'வழிபாட்டு இடைவெளி ' யினைப் பின்பற்றி இறை வணக்கம் செய்தால் எல்லோரும் நன்றாக மகிழ்வாக வணங்கலாம். இதனை நமக்கு மீண்டும் நினைவூட்டவும் பயிற்சி தரவும் ஒரு குறோணா நுண்ணங்கி வரவேண்டுமா? வந்துவிட்டது. இதனை முற்றாக நீக்கவேண்டுமாயின் உருப்படியான உயர்ந்த மருத்துவ அறிவுரையுடன், வழிபாடும் நமக்குக் கைகொடுக்கும்.

திருஞானசம்பந்தர் நமக்கு வரக்கூடிய இடர்களையெல்லாம் களைய வேண்டும் என இந்த அண்டத்திலே உள்ள கோள்களை வேண்டுகிறார். அவ்வாறு வரக்கூடிய இடர்களிலே நோய்களையும் குறிப்பிடுகிறார். அவர் பாடிய கோளறு பதிகத்தில் "கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர் கொடு நோய்களான பலவும்" என்று கூறுகிறார். இடர்கள் வரும்போது நாம் இறைவழிபாட்டிலே ஈடுபடுவது இயல்பானதாகும். ஜப்பானிலே கொடுமையான எரிமலை தீயினை வெளிப்படுத்தும்பொழுது அது தொடர்பாக அறிவியல் தடுப்பு முயற்சிகள் நடைபெறும்போதும், அவ்வூர் முதுமக்கள் எரிமலையின் வேகம் தணியவேண்டுமென இறைவனை வேண்டி மடையிட்டு வழிபடுவார்கள்.
பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கொடிய நோயினை நாட்டிலிருந்து அகலுமாறு பெரியாழ்வார் இறைஆணையுடன் துரத்துகிறார்.

"உற்ற உறுபிணி நோய்காள்!
உமக்கொன்று சொல்லுகேன் கேண்மின்,
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார்
பேணும் திருக்கோயில் கண்டீர்,
அற்றம் உரைக்கின்றேன் இன்னம்
ஆழ்வினைகாள்! உமக்கு இங்கோர்
பற்றில்லை கண்டீர் நடமின்,
பண்டன்று பட்டினம் காப்பே."

என்று நோய்களை இந்த பட்டினத்திலிருந்து அகலுமாறு கூறுகிறார். திருப்பாற்கடலிலே பள்ளிகொள்ளும் திருமாலை, இந்த நோய்களால் எந்தத் தீவினையும் வராமல் பட்டினம் காவற்பொருட்டாக வேண்டுதல் செய்கிறார்.

"அரவத் தமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப்
பள்ளிகொள் கின்ற பிரானை
பரவுகின்றான் விட்டு சித்தன்
பட்டினங் காவற் பொருட்டே."

பட்டினங் காக்கப்பட்டால் நாடு காக்கப்படும். நாடு காக்கப்பட்டால் உலகம் காக்கப்படும். காப்பவன் இறைவனல்லவா!

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் 60ஆவது அகவை நிறைவையொட்டி வெளியிடப்படும் இச் "சிவத்தமிழ்" சிறப்பு மலருக்கு இக்கட்டுரையை வழங்குவதில் மகிழ்வடைகிறேன். மிகச் சிறந்த பேச்சாளரும், அறங்காவலரும், சமூக சேவையாளரும், புலமையாளருமாகிய திருமுருகனுக்கு எங்கள் மனமுவந்த வாழ்த்துக் களைத் தெரிவிக்கிறேன். இன்னும் பல்லாண்டு! பல்லாண்டு!!**

# சிவபூமிக்கு பெருமை தரும் திருவாசக அரண்மனை!



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ் மண் தன்னிகறற்ற சிவபூமியாகவும் திகழ்கிறது யாழ்ப்பாண ராச்சியத்தை வரவேற்கும் நுழைவாயிலில் நீரேரிகழும் பனைமரக்காடுகளும் தலையசைத்து வரவேற்கும் இடம் நாவற்குழி.

யாழ்,நாவற்குழியில் ஏ-9 பிரதான வீதியில் சிவபூமி எனும் பெயரிலான திருவாசக அரண்மனை நிர்மாணிக்கப்பட்டுள்ளது . சுமார் பத்துப் பரப்பு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் திருவாசக அரண்மனையில் வேறெங்கும் காண முடியாத பல்வேறு தனித்துவச் சிறப்புக்கள் உள்ளடங்கியுள்ளன.

திருவாசக அரண்மனையின் மூலவராகத் சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது . இந்தக் கோயிலில் வானுயர்ந்த ஐந்தடுக்கு விமானத்தில் சிவ லிங்கங்கள் மிளிரக் காட்சி தருகின்றன.



சிவதெட்சணா மூர்த்தியின் திருவுருவச் சிலை முன்பாக 21 அடி உயரத்தில் அழகிய கருங்கர் தேர் பல்வேறு கலையம் சங்களுடன் கூடிய வகையில் அழகுற உருவாக்கப்பட்டுள்ளது. தேருக்கு மேலாகச் முழுமுதற் கடவுளான சிவபெருமான். சிவலிங்க வடிவிலும் மற்றும் திருவாசகம் அருளிய மாணிக்கவாசக நாயனார் ஆகியோரின் உருவச்சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

தேரின் முன்பாக கருங்கல்லான பெரிய நந்தி அமைந்துள்ளது. கருங்கல்லில் உருவாக்கப்பட்ட 108 சிவலிங்கங்கள் அரண் மனைப் பிரகாரத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது சிவ தெட்சணாமூர்த்தி திருக்கோயிலின் இருமருங்கிலும் மணிவாசகரால் அருளப்பட்ட 51 திருப்பதிகங்களை உள்ளடக் கிய 658

திருவாசகப் பாடல்களும் கருங்கல்லில் கையால் உளி கொண்டு செதுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளாமை வேறெங்கும் காண முடியாத அற்புதக் காட்சியாகும். கிளிநொச்சி விவே கானந்தா நகரைச் சேர்ந்த ஆனந்தன் வினோத் என்ற இளைஞர் திருவாசகப் பாடல்கள் முழு வதையும் தனது கையால் உளி கொண்டு " செதுக்கியுள்ளார்

சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும், பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்
திருவாசக அரண்மனைக்கு மென்மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் சிவபுராணம் மலையாளம், ஆங்கிலம், கன்னடம், சிங்களம்,அரேபிய மொழி என 11 மொழிபெயர்ப்புக்கள் காட் சிப்படுத்தப்பட்டுள்ளன.

திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பது முதுமொழி. இதனால் தான் தமிழில் சிறந்த இலக் கியங்களின் வரிசையில் திருவாசகத்திற்கும் தனி இடமுண்டு. சிறப்புக்கள் பொருந்திய திருவாசகத்தைப் பேணிப் பாதுகாப் பதற்கு முதன்முதலாக பிரமாண்டமான திருவாசகம் அரண்மனை நிர்மாணிக்கப்பட்டுள்ளமை யாழ் மண்ணுக்கு கிடைத்த மிகப்பெரிய சான்றாகும் .

**நன்றி – ப.ஆரணி** (சக்தி FM )



## சீர் யாவும் பெறுதி

- விழிசைக் குயில்


மனித வாழ்க்கையின் மதிநுட்பம் தேரவும்
மானிடர்களின் செல்நெறி அறியவும்
தமிழர் வாழும் நாற்றிசை நாடுகள்
இமியும் தவறாது சென்று திரும்புவாய்
நிழல் கொடுக்கும் மரமாய் நிலைக்க
பகராப் பண்புகள் பகர்ந்து மீளுவாய்
நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகும்
நிலைத்த நண்பரின் நியமமும் மீளுமே
விலகி ஊரிலோர் பொந்தில் வாழ்வதை
வெறுத்தனை உலகம் வெற்றி ஈந்தது
ஏதிலார் சௌரியம் பற்பல பெறுவரால்
ஈதினி உந்தன் வழியென்றமைத்தனை
முத்திரை பொறிக்கும் முதல் மனிதராக
இத்தரை முழுதும் உழைத்திடுவாயே
சீர்யாவும் பெறுதி சில வண்ணத்தாலென்று
பாரெங்குமுனை வாழ்த்திப் பாடுவார்கள்



திருமதி.கோகிலா.மகேந்திரன்







# வரலாற்றில் தடம் பதித்த செஞ்சொற் செல்வர். ஆறு.திருமுருகனின் மாண்பு நிறைந்த மணிவிழா

-ந.சதாசிவ ஐயர்.
(மேனாள் மேலதிக பதிவாளர் நாயகம், இலங்கை)

பொதுவாக ஒருவர் அகவை அறுபதை நிறைவு செய்யும்போது மணிவிழா நிகழ்வு நடைபெறும் அவரவரின் சேவைக்கேற்ப மேளம் ஊர்வலம் மாலை மரியாதை மேடைப்பேச்சு விருந்து பசாரம் என நிறைவு பெறும் அழைத்துவிட்டார்களே என ஒப்புக்கு வந்துவிட்டுப்போகும் கூட்டமும் இருக்கும் இதுதான் யதார்த்தம்.

ஆனால் அண்மையில் கொரோண தாக்கத்தால் மக்கள் கூட்டம் கூடமுடியாக நிலையில் ஒன்று சேர முடியாதநிலையில் பலநூறுபேர் கலந்து கொள்ள ஐம்பதுக்கு மேற்பட்டோர் உரையாற்ற பலவழிகளில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்ற ஐந்து மணிநேரமாக மிக மிகச்சிறப்பாக நடந்தது ஒரு மணிவிழா.



திரு லலீசன்
(கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் )

சிறப்பான ஒழுங்கமைப்புடன் மணிவிழா வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்ய சிறப்புமிக்க ஒரு விழாவாக அமைந்தது செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் மணிவிழா. ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் திரு லலீசன் அவர்களுடன் ஆர்வலர் சிலர் சேர்ந்து மெய்நிகர்முறையில் ஒழுங்கு செய்த மணிவிழா அவர்களின் எதிர்பார்ப்பையும் தாண்டி இமயத்தின் உச்சிக்கு சென்றது.

மாலை ஏழுமணிமுதல் நள்ளிரவு பன்னிரண்டையும் தாண்டி ஆர்வத்துடன் ஆர்வலர்களின் வாழ்த்துக்களுடன் நீண்டது விழா. நன்றி நிறைந்த ஆனந்தக் கண்ணீரால் கௌரவித்து திருமுருகனையும் பங்குபற்றியோரையும் கண்ணீரில் நனையவைத்தனர்.

திரு லலீசன் அவர்கள் நெறிப்படுத்த பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகள் தலைமைதாங்க விழா ஆரம்பமானது.
சமயப்பெரியார்களின் ஆசியுரைக்குப்பின் ஆறுதிருமுருகனின் இனிய பேச்சு உலகெங்கும் ஓங்கி ஒலிக்க பயிற்சிப்பட்டறையமைத்த கம்பன்கழக பெரியோன் கம்பவாரிதி அவர்கள் ஒரு முழுமையான ஆய்வுக்கட்டுரைபோல் அழகாக குறுகிய நேரத்தில் தமக்கே உரித்தான பாணியில் உரையாற்றினார்கள். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீசற்குணராசா அவர்கள் ஆறுதிருமுருகனின் பல்கலைக்கழக பணிகள்பற்றி குறிப்பிட்டதுடன் பல ஆண்டுகளாக பேரவையை அலங்கரிப்பதையும் எடுத்தியம்பினார்கள்.

அதனை ஒப்புநோக்கம் போது அவரது மணிவிழாக் குறித்து நான் எழுதிய கட்டுரை ஒன்றில் திருமுருகன் ஒரு பல்கலைக் கழகமில்லா வேந்தர் எனக் குறிப்பிட்டமையை உறுதிப்படுத்துவதாக அது அமைந்தது எனலாம். இந்திய துணைத்தூதுவர் திரு சங்கர் பாலச்சந்திரன் அவர்கள் இந்து சமய விவகாரத்திணைக்களப் பணிப்பாளர் திரு அ. உமாமகேஸ்வரன் அவர்கள் மூத்த ஆசிரியர் திரு வ.சி.குணசீலன் லண்டனில் இருந்து பெரியார் திரு நடராசா சச்சிதானந்தன் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்திலிருந்து திரு சூ. பாலசிங்கம் ஆகியேரின் உரைகள் காத்திரமாகவும் உணர்வுபூர்வமாகவும் இருந்தன

திருமுருகன்போல் வாழ்ந்துகொண்டு அவரோடு சேர்ந்து பணியாற்றும் அமெரிக்க ஹவாய் ஆதீனத்தைச்சேர்ந்த தொண்டுநாதன் சுவாமிகளின் திருமுருகனுடன் சேர்ந்து பயணித்த அனுபவங்கள் பலரின் கண்களைக்கலங்க வைத்தன. இந்தியாவிலிருந்து சொல்வேந்தர் சுகிசிவம் ஐயா அவர்களும் ஆர்வத்துடன் கலந்து உரையாற்றினார் என்பது நிகழ்வுக்கு மகுடம்வைத்ததாக அமைந்தது.

உரையாற்றிய ஒவ்வொருவருமே திருமுருகனின் ஒவ்வொரு செயற்பாட்டையும் இப்படி ஒரு ஆளுமையா என வியக்கும்வண்ணம் ஒவ்வொரு கோணத்தில் எடுத்துரைத்தனர். மேடைக்காய் எவரும் வரவில்லை. புகழுக்காய் எவரும் பேசவில்லை. அழைத்ததற்காய் எவரும் பேசவில்லை ஒவ்வொருவரும் திருமுருகனின் சாதனைகளை தம்மோடு தொடர்புபட்ட அவரின் செயற்பாடுகளை அவரின் துணிவை ஆற்றலை உழைப்பை பரந்தமனப்பான்மையை வெளிப்படுத்திச் சென்றனர்.
திருமுருகன் அவர்கள் தனது ஏற்புரையில் சிறு வயதிலிருந்தே அவர் எப்படி அனுபவரீதியாக ஒவ்வொரு ஆற்றலையும் பெற்றார் என்பதையும் கடந்துவந்தபாதையையும் அடிக்குமேல் அடி அவரை புடம்போட்ட வரலாற்றையும் வாழ்க்கை அனுபவமும் இளகிய மனச்செயற்பாட்டையும் பார்த்துக்கொண்டிருப்பவர்களின் கண்கள் குளமாக எடுத்தரைத்தார்.உலக உலாவினால் சம்பாதித்த நல் மனிதர்களையும் அவர் ஒரு தனிமரமல்ல பெருந்தோப்பு என்பதையும் எந்தநிலையிலும் வெள்ளைவேட்டி விபூதியுடன் உலாவந்த நிகழ்வுகளையும் பெருமையுடன் எடுத்துரைத்தார்.அவருடைய பேச்சு ஒரு ஆவணப்படமாக எல்லோர் கண்களையும் செவிகளையும் நிறைத்தன.



கம்பவாரிதி அவர்கள்

அதனை உறுதிப்படுத்தும்வகையில் அவரது செயல்பாடுகளை விவரிக்கும் ஆவணப்படமொன்றை தூமி அமைப்பைச்சேரந்த இளைஞர் திருவாளர்கள் ஜீ.சஜீவன் மகாசேனன் சந்தோசன் ஆகியோரும் அவர்தம் நண்பர்களும் சேர்ந்து தயாரித்திருந்தனர் அதனைசுருக்கமான முன்னனோட்டமாக வெளியிட்டனர். அதனை ஆர்வலர்கள் அகவை அறுபதில் ஆறுதிருமுருகன் எனும் யூடியூப் மூலம் காணலாம்.

செஞ்சொற்செல்வருக்கு பொன்னாடைபோர்த்து மாலையணி வித்து கௌரவிக்கவில்லையே எனும் குறைநீக்க அந்த அசாதாரண நிலையிலும் வேளையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. இ.சர்வேஸ்வரா மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு கு.பாலசண்முகன் ஆகியோர் அவரது இல்லம் சென்று நேரடியாக கௌரவிக்கும் நிகழ்வும் காணக்கூடியதாக அமைந்தது.

இவற்றுக்கெல்லாம் சிகரம்வைப்பதாக அமைந்தது நிகழ்வின் இறுதியில் பார்வையாளர்களாக இணைந்துகொண்டவர்களின் வாழ்த்துரை.

பட்டியலிட முடியாத அளவுக்கு நீண்டது ஓரிரு நிமிடங்களை ஒதுக்கி தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டி ருந்தனர் திரு லலீசன் அவர்களும் லண்டனிலிருந்து திரு பாலசிங்கம் அவர்களும். பகல் இரவு முன்னிரவு பின்னிரவு என்றில்லாமல் குளிரையும் வயோதிபத்தையும் பொருட் படுத்தாமல் காத்திருந்து நிகழ்வைப்பார்த்ததுடன் சிறியோர்முதல் பெரியோர்வரை பல பெரியவர்களுடன் ஆர்வலர்கள் நலன் விரும்பிகள் நல் உள்ளங்கள் திருமுருகனுடன் சேர்ந்து பயணிப்போர் என பலர் குடும்பங் குடும்பமாக கண்கள் நீர்சொரிய உணர்வுபூர்வமாக சொன்ன வாழ்த்துக்களை கண்டு வியந்தோம்.

மிகவும் வயதானவர்கள் அந்தநேரத்திலும் காத்திருந்து சொன்ன வாழ்த்துக்கள்தான் எத்துனை பெறுமதியானவை.

யேர்மனியில் இருந்து வெற்றிமணி பத்திரிகையும் சிவத்தமிழ் சஞ்சிகையும் இணைந்து சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவித்தது.

அவரால் வாழ்ந்த உள்ளங்கள் அவரால் வளர்ந்த பிள்ளைகள் பேசமுடியாது கண்ணீர்மல்க சொன்ன நன்றிகள்தான் எத்தனை எத்தனை.இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பல கல்விமான்கள் பெரியோர்கள் தாமாக கலந்து திருமுருனை பாராட்டியதும் குறுந்தகவல்கள் அனுப்பியதும் அவருக்கும் யாழ் மண்ணுக்கும் பெரும் பெருமையாகும்.

இந்த மண்ணில் நம்பி சமய சமூக பணிக்கு உதவ உலகளாவிய ரீதியில் உள்ள நல் உள்ளங்களுக்கெல்லாம் ஒரே நபராக தொண்டாற்றும் திருமுருகனின் மணிவிழா ஆயிரக்கணக்கானோர் ஒரேநேரத்தில் பங்குகொள்ளவும் ஐம்பதுக்கு மேற்பட்டோர் வாழ்த்துச் சொல்லவும் நூற்றுக்கணக்கானோர் குறுந்தகவல் வாழ்த்தனுப் பவும் சிறப்பான விழாவாக அமைந்தது அத்தனைபேரும் அழையாவிருந்தாளிகள் அறுதிருமுருகன்மீத அன்பு கொண்டவர்கள் என்பது ஒரு வரலாற்றுச்சாதனையாகும்.

அதனை ஒழுங்கமைத்த செந்தமிழ்ச்சொல்லருவி லலீசன் தலைமையிலான நண்பர் குழாத்தினர் காலமறிந்து செய்த சேவையால் பாராட்டுக்குரியவர்கள். அன்னை துர்க்கை நல்லைக் கந்தன் அருளுடன் சிவபூமி தெட்சிணாமூர்த்தி பாதங்களை வணங்கி ஆறு திருமுருகன் பணி தொடர அவரையும் அவருடன் சேர்ந்து பயணிக்கும் உள்ளங்களையும் வாழ்த்துவோம்.

## மாணவப் பருவத்திலும் தலைமைத்துவப் பண்புகள் அருமையாகப் பெற்ற ஆறு.திருமுருகன்



அன்றும், இன்றும்



செஞ்சொற் செல்வர்
கலாநிதி ஆறுதிருமுருகன்

அன்று, 1976/77 (Grade 11&12) இல்,யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் உயர்தர விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தின் தலைவராக, கல்லூரியின் அதிபர், ஒன்றியத்தின் புரவலர்களான ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக் குழு அங்கத்தவர்களுடன் நடுநாயகமாக இருக்கும், இன்றைய தோற்றத்துக்கு முற்றிலும் மாறுபட்ட தோற்றம். இன்றைய தலைமுறையில் பலர் அறியாதது. நன்றி: கம்பவாரிதி- ஜெயராஜ் -இலங்கை

# திருமலையில் அழிவடையும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் ஆலயம்





பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்

இலங்கையில் இந்து மதத்திற்கு 2500 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு உண்டு. பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி எழுந்த பாளி இலக்கியங்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு முன்னரே இலங்கையில் இந்து மதமும், அம்மதம் சார்ந்த ஆலயங்களும் இருந்ததாகக் கூறுகின்றன. அவற்றுள் கிழக்கிலங்கையில் இருந்த இற்றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று சிவன் ஆலயங்கள் பற்றி மகாவம்சம் கூறுகின்றது.

சம கால இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான இந்து ஆலயங்கள் புதுப் பொலிவுடன் காணப்படுகின்றன. அவற்றுள் கணிசமான ஆலயங்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் சுதேச மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர், பழைய ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது பழைய ஆலயங்களின் பெயரை நினைவுபடுத்தி புதிய இடங்களில் கட்டப்பட்டவையாக உள்ளன. போர்த்ததுக்கேயர் ஆட்சிக்கு முன்னர் இம்மாகாணங்களில் இருந்த ஆலயங்கள் பற்றி இலக்கியங்கள், புராணங்கள், கல்வெட்டுகள் மற்றும் ஐரோப்பியர் கால ஆவணங்கள் என்பவற்றில் பல வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. ஆயினும் தற்காலத்தில் அவ்வாலயங்கள் இருந்த ஒரு சில இடங்களில் மட்டும் அவ்வாலயங்களின் அழிபாடுகளை அடையாளம் காணமுடிகின்றன. ஆயினும் அவ்வழிபாடுகளை வைத்து அவ்வாலயங்களின் கட்டிட அமைப்பையோ, கலை மரபையோ, வழிபாட்டிலிருந்த தெய்வங்கள் பற்றியோ அறிய முடியவில்லை.

இதற்கு இம்மாகாணங்களின் கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய போர்த்துக்கேயரும். பின்வந்த ஒல்லாந்தரும் சுதேச மதங்களுக்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இவ்வாலயங்கள் அழிக்கப்பட்டதே காரணமாகும்.

அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களின் கட்டிடப் பாகங்களைக் கொண்டே அவர்களின் ஆட்சிக் காலக் கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள், நிர்வாகக் கட்டிடங்கள் என்பன கட்டப்பட்டன. இந்த உண்மையை அவர்களின் ஆட்சி ஆவணங்களே உறுதி செய்கின்றன.

இதை தற்போது யாழ்ப்பாணக் கோட்டையில் மேற் கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வில் கிடைத்து வரும் இந்து ஆலயங்களுக்கு உரிய கட்டிடப் பாகங்கள் மேலும் உறுதி செய்கின்றன.

இருந்த போதிலும் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்களின் ஆதிக்கம் பெரும்பாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை அண்டிய மாகாணங்களில் ஏற்பட்டிருந்ததனால் அவர்களின் கலையழிவுக் கொள்கையில் இருந்து மாகாணங்களின் உட்பகுதியில் இருந்த ஆலயங்கள் தப்பித் திருக்க இடமுண்டு. அவற்றில் ஒன்றாகவே திருமங்கலாய்ச் சிவன் ஆலயத்தைப் பார்க்கின்றேன்.


இவ்வாலயம் திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட திருமங்கலாய் என்ற வரலாற்றுப் பழைமைவாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் பற்றி திருகோணமலை தலபுராணங்களில் ஒன்றான திருகரைசை புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது இவ்வாலயம் கிளிவெட்டியின் பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் தொலைவில் மீன்சார வேலி போடப்பட்ட அடர்ந்த காட்டின் மத்தியில் காணப்படுகின்றது.

இவ்விடத்திற்குச் செல்லும் பாதையில் பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் யானைகளின் நடமாட்டத்தை எதிர்கொள்வது சாதாரண நிகழ்வாகவே இருக்கின்றது. இவற்றின் காரணமாகவே இதுவரை தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்கள் இவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதில் தயக்கம் காட்டி வந்துள்ளனர் எனலாம்.

இந்நிலையில் திருமங்கலாய் பிரதேசத்தில் வாழ்ந்த மூதாதை யினரின் வழித்தோன்றல்களாக தற்போது கிளிவெட்டியில் வாழ்ந்து வரும் திரு. வி. முத்துலிங்கம், திரு. கே. குலேந்திரராசா, திரு. கே. மாணிக்கராசா முதலியோர் இவ்வாலயத்தை ஆய்வு செய்வதற்கு எமக்கு வழங்கிய பாதுகாப்பு உத்தரவாதமும், உதவிகளும் அவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதற்கு தூண்டுதலாக அமைந்தது.

இந்த ஆய்வில் எமது பல்கலைக்கழக தொல்லியல் இறுதி வருட மாணவர்களுடன் மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாண செயல்திட்ட முகாமையாளர் திரு. லக்ஸ்மன் சந்தன மைத்திரிபால மற்றும் யாழ்ப்பாண பிராந்திய தொல்லியற் திணைக்கள அதிகாரிகளான திரு. மணிமாறன், திரு. கபிலன் ஆகியோர் பல சிரமங்களுக்கு மத்தியில் எம்முடன் இணைந்து பல நாட்களாக ஆய்வில் பங்கெடுத்தமை மாணவர்களுக்குப் புதிய ஆய்வு அனுபவத்தைக் கொடுத்தது.

தற்போது இவ்வாலயத்தின் பெரும் பகுதி முற்றாக அழிவடைந்து அதன் அழிபாடுகள் ஆங்காங்கே கற்குவியல் களாகக் காணப்படுகின்றன. ஆயினும் அவ்வாலயத்தின் கட்டிட அமைப்பையும், அதன் கலை மரபையும், ஆலயம் தோன்றி வளர்ந்த காலத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றன.





# வரலாறு கூறும் கல்வெட்டுக்கள்

கருங்கற்களையும், செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்ட இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகமும் அதன் மேலமைந்த விமானமும் முற்றாக அழிவடைந்து, அதன் கட்டிடப் பாகங்கள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. கர்ப்பக்கிரகம் இருந்த இடம் பிற்காலத்தில் புதையல் எடுப்போரால் தோண்டப்பட்டு அவ்விடம் தற்போது ஒரு குழியாகக் காணப்படு கின்றது. கர்ப்பக்கிரகத்திற்கு முன்னால் அழிவடைந்து காணப்படும் அந்தராளத்தில் ஆலய காலப் பொருட்கள் சிலவற்றுடன் பிற்காலத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்ட சிவலிங்கமும் காணப்படுகின்றது. அந்தராளத்திற்கு முன்னால் மகா மண்டபமும். பலிபீடமும் இருந்தமைக்கான அத்திபாரங்களும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட அலங்காரத் தன்மை கொண்ட பல கருங்கற் தூண்களும் காணப்படுகின்றன.

இம்மகாமண்டத்திற்கு வலப் பக்கமாக பயன்படுத்தப்படாத நிலையில் கருங்கற்களான மாடங்கள், தெய்வச் சிலைகள் வைப்பதற்குப் பயன்படுத்திய பீடங்கள் மற்றும் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன. மகா மண்டபத்தின் இடப் பக்கமாக ஆலயத்தில் பயன்படுத்தியிருந்த கோமுகிகள், சந்தனம் அரைக்கும் கற்கள், கபோத வடிவிலமைந்த அரைவட்டத் தூண்கள் காணப்படுகின்றன. மகா மண்டபத்திற்கு மிக அருகில் கருங்கற்களைக் கொண்டு சற்சதுர வடிவில் ஆழமாகக் கட்டப்பட்ட ஆலயத்தின் தீர்த்தக் கிணறு காணப்படுகிறது. மேலும் இவ்வாலயத்தைச் சுற்றி சுற்று மதில்களும் அவற்றிடையே துணைக் கோவில்களும் (பரிவாரத் தெய்வங்கள்) இருந்திருக்கலாம் என்பதை அவற்றிற்குரிய அத்திபாரங்களும் பரவலாகக் காணப்படும் செங்கட்டிகளும், கருங்கற்களும் உறுதிப்படுத்துகின்றன.

இந்த ஆய்வின் போது கட்டிட அழிபாடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் இவ்வாலய வரலாற்றுடன். கிழக்கிலங்கை வரலாறு பற்றிய ஆய்விலும் அதிக முக்கியத்துவம் வாய்ததாகக் காணப்படுகின்றது. எமக்குத் தெரிந்தவரை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்களுடன் அவ்வாலயங்களின் வரலாறு கூறும் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அந்த இரண்டு அம்சங்களும் முதன் முறையாகத் திருமங்கலாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் எழுத் தமைதியைக் கொண்டு அவை வேறுபட்ட காலங்களில், வேறுபட்ட நோக்கங்களுக்காக பொறிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. அவற்றுள் கி.பி. 10 ஆம், கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய மூன்று கல்வெட்டுக்கள் ஆலய நிர்வாக ஒழுங்குகள் பற்றியும், அவ்வாலயத்திற்கு சிற்றம்பலம் உடையார், திருவெண்ணைக்கூற்றன், திருவரங்கம் முதலான அதிகாரிகள், சமூகப் பெரியவர்கள் வழங்கிய தானங்கள் (காசு) பற்றியும் கூறுகின்றன. கி.பி. 15 ஆம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்குரிய ஏனைய இரு கல்வெட்டுக்களும் இவ்வால யத்திற்கு பசுக்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்றன. இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கங்குவேலி என்ற இடத்தில் திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணி ஒன்று காணப்படுகின்றது. இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற்காலத்தில் கங்குவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும். ஆவ்வாலய மணியில் திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரில் வசித்த (திருமங்கலாயில் வசித்த) -பத்திபெட்டி மகன் பத்தன் யுடைய உடையம- என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் எழுத்தமைதி கொண்டு இதன் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டிற்கு உரியதெனக் கூறலாம்.


ஆகவே மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள், ஆலய மணிச் சாசனம் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17 ஆம் நூற்றாண்டுவரை அழிவடையாத நிலையில் இப்பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரிய வருகின்றது. இவ்வாலயம் இலங்கைத் தமிழர் குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வில் பின்வரும் அம்சங்களில் முக்கியத்துவம் பெறுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

1.இவ்வாலயம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலிருந்து திராவிடக் கட்டிடக்கலை மரபில் தோன்றி வளர்ந்ததற்குப் பின்புலமாக திருமங்கலாய்ப் பிரதேசத்தின் தொன்மையான, செறிவான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்துள்ளமை தெரிகின்றது. இந்த உண்மையை எமது ஆய்வின் போது இப்பிரதேசத்தில் ஆங்காங்கே பிற தேவைகளுக்காக வெட்டப்பட்டிருந்த ஆழமான குழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட 10 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், சுடுமண் உருவங்கள் முதலான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

2.தமிழகத்தில் பல்லவர் ஆட்சியில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் சமகால இலங்கையிலும் கற்களைப் பயன்படுத்தி திராவிடக் கலைமரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றது. அவற்றுள் சோழ ஆட்சியின் தலைநகராக இருந்த பொலநறுவையில் கட்டப்பட்ட இரண்டாம் சிவதேவாலயமே இலங்கையில் இதுவரை ஓரளவு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பொலநறுவை இராசதானி கால வரலாற்றில் எந்த இடத்திலும் சொல்லப்படாத திருமங்கலாய் சிவன் ஆலயம் அதன் கட்டிட அமைப்பிலும். கலைமரபிலும் சற்று மேலோங்கிக் காணப்படுவதன் முக்கியத்துவம் எதிர்காலத்தில் விரிவாக ஆராயபட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

3.சோழர் ஆட்சியிலும் சோழர் ஆட்சிக்குப் பின்னரும் பொல நறுவைக்கு அப்பால் வடக்கு - கிழக்கு இலங்கையிலேயே சோழ ஆட்சியாளர், தமிழ் அதிகாரிகள், தமிழ் வணிக கணங்கள் முதலியோரால் கட்டப்பட்ட ஆலயங்கள் பற்றிப் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆயினும் அக்கல்வெட்டுக்கள் கூறும் ஆலயங்கள் எந்த இடங்களில் இருந்துள்ளன என்பது பெரும்பாலும் இதுவரை அடையாளம் காணப்படாமலே உள்ளன. ஆனால் திருமங்கலாய் ஆலயம் பற்றிய கல்வெட்டுக்களுடன், ஆலய அமைப்பையும், அதன் கலை மரபையும் அறியக்கூடிய அரிய பல ஆதாரங்கள் முதன் முறையாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் கிழக்கிலங்கை இந்துக்களின் வரலாறு, பண்பாடு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

4.இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற் குரிய ஆலயங்களாகக் காணப்படுகின்றன.









**இம்மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால் தமிழ் மக்களின் வரலாறும், பண்பாடும் பொதிந்து காணப்படுகின்றது.**

ஆனால் அநுராத புரத்திலும், இலங்கையின் ஏனைய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலான ஆதிகால, இடைக்கால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பிற்காலத்தில் அவை சுற்றுலாத் துறையின் முக்கிய மரபுரிமை மையங்களாகவே செயல்பட்டு வருகின்றன. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலிருந்து 1964 ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் பிரதான வழிபாட்டு ஆலயமாகவே இருந்துள்ளது. இந்த உண்மையை அவ்வாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும், ஆலய மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனமும், அங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாலயத்தின் பழமையையும், அதன் வரலாற்றுப் பெறுமதியையும் எமது ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட சக்தி தொலைக்காட்சி நிறுவனம் இவ்வாலயத்தை ஆவணப்படுத்த முன்வந்தது. இதற்காக அரச திணைக்கள அனுமதியுடன் அன்றைய சக்தி தொலைக்காட்சி முகாமையாளரான திருமதி. உமாச்சந்திரா பிரகாஷ் தலைமையில், சக்தி அலைவரிசை பிரதானி ஆர்.பி.அபர்ணாசுதன் வழிகாட்டலில் சக்தி வானொலி முகாமையாளர் திரு.ஞா.கணாதீபன் மற்றும் குழுவினரை திருமங்கலாய்க்கு அனுப்பி வைத்தது. அவர்கள் ஏழு மையில் தூரம் கால் நடையாகவும், உழவு இயந்திரத்திலும் அச்சத்துடன் காட்டு வழியாகப் பயணம் செய்து திருமங்கலாய் சிவன் ஆலயத்தில் காணப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் ஆவணப்படுத்தினர். இவ்வரிய பணியால் ஆய்வில் ஈடுபட்ட எமக்கும், அங்கு கூடியிருந்த மக்களுக்கும், தனது காலத்திலேயே இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்திட வேண்டும் என அயராது உழைத்து வரும் திரு. வி.முத்துலிங்கத்திற்கும் பெரும் மகிழ்ச்சியையும், நம்பிக்கையும் ஏற்படுத்தி இருந்தது.

இவ்வாலயத்தை ஆவணப்படுத்திய சக்தி ஊடக நிறுவனம் அது பற்றிய செய்தியை மக்களிடம் கொண்டு சென்ற போது இவ்வாலயம் பற்றி மேலும் அறிய வேண்டும், நேரில் பார்வையிட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இதை உணர்ந்து கொண்ட நாம் இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்து பாதுகாக்கும் நோக்கில் திருமதி. உமாச்சந்திரா பிரகாஷ் அவர்களுடன் இணைந்து பல முயற்சியகளில் ஈடுபட்டோம். அதற்காக ஜனாதிபதி, சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், அமைச்சின் அதிகாரிகள், கௌரவ இராஜங்க கல்வி அமைச்சர் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலியோரின் உதவிகளை நாடினோம். இலங்கைத் தொல்லியற் திணைக்களம் தனது அதிகாரிகளை அனுப்பி இவ்வாலயத்தின் பழமையை உறுதிப்படுத்திக் கொண்டது. மத்திய கலாசார நிதியம் ஆலயத்தை மீள்புனரமைப்புச் செய்வதைப் பரிசீலிப்பதாகப் பதில் அனுப்பியது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் எமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிக்க முன்வந்த அதிகாரிகளும் பதவி மாற்றம் செய்யப்பட்டதால்

தற்போது எல்லா முயற்சிகளையும் நாம் ஆரம்பத்தில் இருந்தே தொடங்க வேண்டிய நிலையில் உள்ளோம். அதற்கு நாட்டின் தற்போதைய நிலையும் சாதகமாகக் காணப்படவில்லை.

இருப்பினும் விலைமதிக்க முடியாத எமது மரபுரிமைச் சின்னம் ஒன்று எம் கண்முன்னே மண்ணுக்குள் மறைந்து போவதை வேடிக்கை பார்க்கும் நிலையும் இல்லை என்றே நம்புகின்றோம். ஏனெனில் கடந்த முப்பது ஆண்டு கால அனர்த்தத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிய போது தமது இருப்பிடங்களைக் காட்டிலும் தமது வழிபாட்டு ஆலயங்களை மீளுருவாக்கம் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்த பெருமைக்குரியவர்கள். இது மதத்தின் மீது எமது மக்களுக்கு உள்ள அதித நம்பிக்கையைக் காட்டுகின்றது.

ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் ஒரு வழிபாட்டு ஆலயமாக மட்டும் பார்க்க முடியவில்லை. பலதரப்பட்ட மக்களின் பார்வையில் இவ்வாலயம் இலங்கையில் உள்ள தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக நோக்கப்படலாம். ஆனால் இந்து மக்களைப் பொறுத்தவரை இவ்வாலயம் அவர்களின் எதிர்காலச் சந்ததியினரிடம் கையளிக்கப்பட வேண்டிய நம்பிக்கை நாற்று. அதற்கும் அப்பால் இலங்கையில் இந்து மதத்திற்கு நீண்ட வரலாறு உண்டு என்பதை அடையாளப்படுத்தும் விலை மதிக்க முடியாத மரபுரிமையின் அடையாளம். இம்மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால் தமிழ் மக்களின் வரலாறும். பண்பாடும் பொதிந்து காணப்படுகின்றது.
ஆகவே இவ்வாலயத்தை மீட்டெடுத்து, மீளுருவாக்கம் செய்து, பாதுகாக்க அனைத்து தமிழர்களும் ஒன்றிணைந்து உழைக்க முன்வர வேண்டும். இப்பணி அரசியல், பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இந்த உண்மையை உரியவர்களிடம் கொண்டு செல்வதற்கு எமது தகவல் தொடர்புச் சாதனங்கள் தமது பணியை தொடர்ந்தும் செய்வார்கள் என்ற நம்பிக்கை எப்போதும் எமக்குண்டு. நன்றி.தினக்குரல்





குறும்கதை

# கற்பூரம்

கே.எஸ்.சுதாகர். அவுஸ்திரேலியா

நடந்துவந்த களைப்புத் தீர, மரநிழலின் கீழ் இருந்த இருக்கையில் சோமுவும் பார்வதியும் அமர்ந்தார்கள்.
கோவிலுக்குள் பக்தர்கள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். முன்வாசலில் இருந்த கற்பூரச்சட்டியில் சுவாலை சுடர்விட்டு எரிகின்றது. தேங்காய்கள் சிதறிப் பறக்கின்றன.

கோவிலையொட்டி ஒரு சிறு கடை இருந்தது. கோவில் நிர்வாகத்தினால் நடத்தப்படும் அந்தக்கடையில் பூசைக்குத் தேவையான பொருட்களுடன் சமயப்புத்தகங்களும் கலண்டர் களும் இன்னும் இதர பொருட்களும் இருந்தன.

இவர்களுக்குச் சமீபமாக சிலர் தள்ளித்தள்ளிக் குட்டிக் கடைகளைப் பரப்பியிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி கோவிலுக்குச் செல்பவர்களின் பின்னால் துரத்துவதும், பின்னர் தன் இருப்பிடத்துக்கு வந்து அமர்வதுமாக இருந்தாள். ஒருவரும் அவர்களைக் கவனிப்பதாக இல்லை. கோவிலுக்கு வருவோர் தமக்குத் தேவையான பொருட்களை, கோவில் நிர்வாகத்தினால் நடத்தப்படும் கடையினில் வாங்கினார்கள்.

அந்தப் பெண் இவர்களையே பார்த்தபடி இருந்தாள். வறுமையின் தரித்திரம் அவளில் தெரிந்தாலும், தோய்த்துலர்ந்த ஆடையை அணிந்திருந்தாள். நெற்றியில் நீறும் பொட்டுமிட்டிருந்தாள்.

“கொஞ்ச சில்லறை இருந்தா தாரும். கற்பூரம் வாங்குவோம்.” என்றார் சோமு.

“சில்லறை இல்லை. இதைப் பிடியுங்கோ” என்று ஒரு தாளை நீட்டினார் பார்வதி.

இருக்கையை விட்டு எழுந்த இருவரும் கோவிலை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். இவர்களையே பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண் பின்னாலே கலைக்கத் தொடங்கினாள்.

“ஐயா.... அம்மா....! கண் காது மூக்கு சுகப்படவேண்டும் எண்டு சொல்லி இந்தக் கற்பூரத்தை வாங்கிக் கொளுத்துங்கோ”

சோமுவுக்கும் பார்வதிக்கும் திக்கென்றது. -சும்மா இருந்த கண் காது மூக்குக்கு இவள் ஏன் வேலை வைக்கின்றாள்?

அது என்ன கண் காது மூக்கு! மற்ற உறுப்புகள் பங்கப் படலாமோ?' சோமுவுக்கு பயம் மனதைப் பற்றிக் கொண்டது.

அவள் திரும்பத் திரும்ப அதையே சொல்லி, இவர்களை வட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

“ஐயா.... அம்மா....! கண் காது மூக்கு சுகப்படவேண்டும் எண்டு சொல்லி இந்தக் கற்பூரத்தை வாங்கிக் கொளுத்துங்கோ.”
அவளை இப்படிப் பேச வைத்தது எது?



மனதில் பயத்தை ஏற்படுத்தி, இப்படி விற்பதற்கு ஏன் துணிந்தாள்? கையில் இருந்த தாள்க் காசை அப்படியே அவளிடம் குடுத்தார். அந்த இடத்தை விட்டு நீங்கினால் போதும் என்றிருந்தது அவருக்கு.

விறுவிறெண்டு கோவிலை நோக்கி நடக்கத் தொடங்கினார். பார்வதி அவரின் பின்னாலே இழுபட்டுக்கொண்டு ஓடினார்.

“ஐயா... அம்மா...! இந்தாருங்கோ கற்பூரமும் மிச்சக்காசும்!”
“எல்லாத்தையும் நீயே வைத்துக் கொள்!”

அவள் விடவில்லை.
“கற்பூரத்தையாவது வாங்கிக்கோங்க...”

சோமு நடப்பதை நிறுத்தினார்.

“இனிமேல் கண் காது மூக்கு எண்டு சொல்லி கற்பூரத்தை விக்க வேண்டாம். சுவாமிக்கு கற்பூரம் கொளுத்துங்கோ எண்டு சொல்லி வில்” சொல்லிவிட்டு வேகமாக நடந்தார்.

அவள் சோமுவின் பதிலினால் திகைத்துப் போனாள்.
“சரிங்க சேர்!”

**கோவில் வாசலில் இருந்த கற்பூரச்சட்டிக்குள் சுடர் பிரகாசித்துக் கொண்டிருந்தது.**

அருகே யாரையும் காணவில்லை.
யார் இதை ஏற்றியிருப்பார்கள்?

சுற்றுமுற்றும் பார்த்தார்கள்.
அந்தப்பெண் மீண்டும் தென்பட்டாள். நின்ற இடத்தில் நின்றபடி, இவர்களையே பார்த்தபடி நின்றாள்.

**அவள் இனிமேல்
அப்படிச் சொல்லமாட்டாள்
என்ற
நம்பிக்கையுடன்,
இவர்கள்
இருவரும்
கோவிலிற்குள்
சென்றார்கள்.**





# உடலின் சக்தி மையங்களும் தன்மைகளும்

கரிணி

சித்தர்களும், முனிவர்களும் காடு மலைகள் எங்கும் அலைந்து திரிந்து காணக் கிடைக்காத விடயங்களையெல்லாம் கச்சிதமாக கண்டுணர்ந்து சொல்லிச் சென்றாலும் அவர்கள் கடைசியில் கண்டு கொண்டு சொன்னது என்னவோ "காடும் தேடாதே! கன்மலையிலும் அலையாதே! இருந்த இடத்தில் உனக்குள்ளே இருக்குதப்பா", "அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் இருக்குதப்பா" என்றனர்.

உச்சிமுதல் பாதம்வரை உருவாகிய மனித உடலானது கருவில் உருவாகும் போது மூளையும் அதனோடு சேர்ந்து இடுப்புவரை நீண்ட முள்ளந்தண்டோடு சேர்ந்த நாடியும் உருவாகிறது. கிட்டத்தட்ட வேல் வடிவத்தில் மூளையோடு சேர்ந்தபடி தொங்கிக் கொண்டிருக்கும் நாடியே சக்தியை பெற்று ஏனைய அங்கங்களுக்கு சக்தி கொடுப்பதாய் திகழ்கிறது. இந்த நாடியில் மூளை முதல் அடிப்பாகம் வரை ஆறு சக்தி மையங்கள் காணப்படுகின்றன. தலையின் உச்சிப் பகுதியில் ஏழாவது சக்தி மையம் உள்ளது. உடலின் பிரதான சக்தி மையங்கள் ஏழு வகைப்படும். இவை வெற்றுக் கண்ணுக்கு புலப்படாத சக்தியுடல் மற்றும் புலப்படும் பௌதீக உடலுக்கு ஆற்றலை வழங்குவதோடு உடலுக்கு அப்பாற்பட்ட மனதுக்கும் ஆற்றலை வழங்குகின்றன.

ஒவ்வொரு ஜீவனுக்கும் அதனை சுற்றியும் சக்தி உடல் இருக்கின்றது. அந்த உடலானது உள்ளே காணப்படுகின்ற சக்தி மையங்களின் ஆற்றலுக்கு ஏற்ப பரந்து வலிவாக பாதுகாப்பு கவசமாகவும் அல்லது குறுகி நலிவாக நோய், துன்பங்களை தடுக்க முடியாமல் பலவீனப்பட்டும் காணப்படும். அதனதன் தன்மைக்கு ஏற்ப புறத்தேயுள்ள பேரண்டத்தில் ஆதிக்கத்தை ஏற்படுத்தும்.

உச்சி முதல் இடுப்பு வரை உள்ள சக்தி மையங்களில் முள்ளந்தண்டின் முடிவுப்பகுதியில் மலவாயிலுக்கு அருகாமையில் உள்ள சக்தி மையம் மூலாதாரம் எனப்படும். சிவப்பு நிற ஒளியுடையது. உயிர்வாழ்வு நிலையை கையாழுகிறது. இந்த சக்தி அடிக்கடி பயம் கொள்வதால் தடைப்படும். அதிகளவில் செயற்படும் போது அதிக உணவு மற்றும் உலக ஆசைகளால் அலைக்கழிக்கப்படும்.

மூலாதாரத்திற்கு மேல்புறமாக குறியின் பின்புறம் அமையப் பெற்றது சுவாதிஸ்டானம் எனப்படும். செம்மை நிற ஒளியுடையது. இது மனமகிழ்வு, பாலின போகத்தை கையாழ்கிறது. இது குற்ற உணர்வினால் தடைப்படும். அதிக சக்திநிலையில் அதிக போகம், எதிர்ப்பாலின மோகத்தை ஏற்படுத்திவிடும்.


தொப்புளுக்கு நேராக அமைந்தது மணிபூரகம் எனப்படும், மஞ்சள் நிற ஒளியுடையது. இது மனவுறுதியை கையாண்டு எப்போதும் சோர்வின்றி செயற்பட வைக்கும். இது வெட்கம், அவமானம் என்பவற்றால் தடைப்படுகிறது. அதீத சக்தி நிலையில் எப்போதும் குறும்பு, செயற்பாடு என பரபரப்பாக ஓய்வின்றி இருக்க செய்து தூக்கமின்மை மற்றும் அமைதியற்ற நிலையை தரும்.

நெஞ்சில் அமையப்பெற்ற சக்கரம் அநாகதம் எனப்படும், இளம்பச்சை நிற ஒளியுடையது. இது அன்பு நிலையை கையாள்கிறது. துக்கம், விரக்தி காரணமாக தடைப்படுகிறது. தடைப்படும் போது தன்மீதும், பிறர் மீதும் இரக்கமற்ற தன்மை ஏற்படும். அதிக சக்தி நிலையில் மிகுந்த அன்பு பெருகுதல் மற்றும் பந்த பாசங்களிலும் சிக்கிக் கொள்கிறது. அன்பு செலுத்த முடியாத நிலையில் அதிக வலிப்படுகிறது.

தொண்டைக் குழியில் அமைந்த சக்கரம் விசுத்தி எனப்படும், நீல நிற ஒளியுடையது. இது உண்மை, நேர்மை நிலையை கையாள்கிறது. பொய் பேசுதல் களவு நடத்தையால் தடைப்படுகிறது. அதிக சக்தி நிலையில் நெஞ்சிற்கு மேற்பட்ட சக்கரமாகையால் புனித நிலையை நோக்கி பயணிக்க தொடங்கு கிறது. துணிவையும், சத்தியத்தையும் வளர்க்க தொடங்குகிறது. ஆன்மா மேம்பட்ட நிலையை நோக்கி பயணிக்கத் தொடங் குகிறது.

ஆறாவது சக்கரம் புருவ மத்தியில் நெற்றிப் பொட்டில் அமையப்பெற்றுள்ளது ஆக்ஞை என்றழைக்கப்படுகிறது. ஊதா நிற ஒளியுடையது. இது நுண்ணறிவு மற்றும் தீர்க்கதரிசனத்தை கையாள்கிறது. இன்னும் பல சிறப்பம்சங்கள் கொண்டது. இது சந்தேகம், மாயையான கற்பனைகளால் தடைப்படுகிறது. அதிக சக்தி நிலையில் மூன்றாவது கண் எனப்படும் நெற்றிக் கண் செயல்படத் தொடங்கி தீர்க்கதரிசனம் புலப்படுவதோடு அதிக விழிப்புணர்வு ஏற்பட்டு பற்றற்ற தன்மை ஏற்படத் தொடங்குகிறது.

இவை ஆறிற்கும் தலைமையாக உச்சந்தலையில் சூரியன் போல் தூய வெண்ணிற ஒளியுடன் திகழ்வது சகஸ்ரதாரதளம் என்றும் பிரம்மரந்திரம் என்றும் அழைக்கப்படுகிறது. இது இறைசக்தி அல்லது பிரபஞ்ச சக்தியை ஆன்மாவோடு இணைக்கிறது. இது நான், எனது என்ற ஆணவம், அகங்காரத்தால் தடைப்படுகிறது. அதீத சக்தி நிலையில் உச்ச புனித நிலையை அடைந்து தெய்வமாகவே மாற்றமடைகிறது.



ஏனைய சக்கரங்களையும் ஆட்சி செய்து எல்லாவற்றையும் தானாகவே மாற்றி விடுகிறது. இந்நிலையில் தன் சக்தியை பகிர்ந்தளிக்க கூடிய உயரிய நிலையை அடைகிறது. மாயைக்குட்பட்ட உலகியல் வாழ்வில் இந்நிலையை அடைவது அவ்வளவு சுலபமல்ல. இருப்பினும் இதுவே ஆன்மாவின் சுயம் என்பதால் சாத்தியமே.

நெஞ்சிற்கு மேலே உள்ள சக்கரங்கள் ஆன்ம ஈடேற்ற உன்னத சக்தி நிலையையும், நெஞ்சிற்கு கீழே உள்ள சக்தி மையங்கள் உலகியல் வாழ்வில் ஈடுபாட்டையும் அதனால் இன்ப துன்ப பக்க விளைவுகளையும் குறிக்கின்றன. சாதாரணமாக இவை அனைத்தும் அமைதியாக குறிப்பிட்ட அளவு நிலைகளில் இயங்கி கொண்டிருக்கும் வரையில் குழப்பமில்லை. அவற்றில் ஏதேனும் ஒன்று விழிப்படைந்து அதீதமாக செயற்படும் போது அதனதன் தன்மையில் அதி கூடிய அளவில் செயற்படத் தொடங்கிவிடும். அல்லது செயற்படாமல் மழுங்கிவிடும் போது அக மற்றும் புறத் தாக்கத்தால் பாதிப்பை வழங்கிவிடும்.

மேல் நோக்கிய சக்தியோட்டத்தை மேல் நோக்கிய முக்கோண வடிவிலும், கீழ் நோக்கிய சக்தியோட்டத்தை கீழ் நோக்கிய முக்கோண வடிவிலும் குறியீடாக கொள்ளப்படுகிறது. இகவாழ்வு, பரவாழ்வுக்கான தேடல் சமமாக இருக்க இந்த இரு முக்கோணங்களை இணைத்து அறுகோணமாக நட்சத்திர வடிவில் கொள்ளப்படுகிறது. இல்வாழ்வைத் துறந்து இறைவழியில் ஈடுபடுபவர்கள் மேல் நோக்கிய முக்கோணத்துடன் குறியீடாக காண்பிக்கப்படுவர்.

இடைகலை, பிங்கலை எனும் இடது மற்றும் வலது சுவாசம் சுழுமுனை எனப்படும் இந்த நீண்ட நாடிக்கு சக்தி வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. உள்முகமாக மனதை குறிப்பிட்ட சக்தி மையத்தில் செலுத்தி சுவாசத்தை உள்ளிளுக்கும் போது அந்த சக்தி மையம் தூண்டப்படுகிறது. இப்படியாகவே தியானத்தில் அடியிலிருந்து சக்திமையங்களை விழிப்படையச் செய்து மேலெழுப்பி அதன் அதீத செயற்பாடு காரணமாக மனதால் உந்தப்பட்டு தீய வழியில் செல்லாமல் இயமம், நியமம் எனப்படும் ஒழுக்கங்களை கடைப்பிடித்து நெஞ்சின் சக்கரங்களை தாண்டி உன்னத நிலைக்கு மேம்பட வைக்கின்றனர் யோகியர். யோக சாதனத்தில் பல இடர்கள் ஏற்பட்டாலும் தொண்டைக் குழியை தாண்டிய அதீத சக்தி மாயையின் பிடியிலிருந்து தப்பி பற்றுக்களை அறுத்து உயிர் நோக்கத்தை அடையும் வழியை கண்டு பிடிக்கிறது.

இந்த சூக்கும சக்திநிலை சிறு கட்டுரையில் விளக்கம் கொடுத்து விட முடியாது என்றாலும் இவை பற்றி ஓரளவு புரிந்து கொள்ள இலகுவாக இருக்கும். தேடுபவரை தேடப்படும் பொருளும் தேடுகிறது என்பது பிரபஞ்ச விதியாகும்.



## சிவத்தமிழ்ச் செல்வியின் மனமறிந்த மைந்தன்.ஆறு.திருமுருகன்

கலை,இலக்கியம்,ஆன்மீகம் எனப் பலதுறைகளிலும் சேவையாற்றுபவர்களை வருடா வருடம் இனங்கண்டு, அவர்களைக் கௌரவிப்பதில் தான் சிவத்தமிழ்ச் செல்வியிடம் கற்ற நல்ல சீடன் என்பதை, நிரூபித்துவருபவர் எங்கள் அன்புக்குரிய ஆறு.திருமுருகன் அவர்கள்.

தீர்க்கமான முடிவுகளை உடனுக்கு உடன் எடுக்கும், திறன் அவரது வெற்றிகளுக்கு காரணமாக அமைகின்றன. இன்னும் தெளிவாகச் சொல்வது என்றால், அரசியல் தலைவர்களால் செய்யமுடியாத எண்ணமுடியாத பலவற்றை, ஆன்மீக பலத்தால் செய்து முடிப்பவர்.
எக்காலத்திலும் அரசியலுக்குள் தலைவைக்காத நடுநிலையான நல்ல ஆன்மீகத்தலைவன்.


(கீழே உள்ள படங்கள் 08.07.2014 நடைபெற்ற அன்னையின் குருபூசை தின நிகழ்வாகும். மற்றும் 2020 ஆண்டு தை 07ம் திகதி சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறக்கொடை விழாவும், சிவத்தமிழ் விருதுவைபவமும்.











# இக்காலகட்டத்தில் காரைக்காலம்மையார் பற்றிய பார்வை



கௌசி.யேர்மனி

பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க

உடலுக்கு அழிவு உண்டு ஆன்மாவுக்கு அழிவில்லை. நிச்சய மோட்சம் கிடைத்து இறைவன் காலடி சேர்ந்தால் அன்றி உயிர்கள் மீண்டும் மீண்டும் தம்முடைய பாவ புண்ணியங்களுக்கேற்ப பிறப்பெடுத்துக் கொண்டிருக்கும் என்பது இந்துமத நம்பிக்கை. உலக வாழ்க்கையை விரும்பாத அடியார்கள் மீண்டும் பிறப்பெடுப்பதை விரும்பாது மோட்சம் கிடைப்பதையே விரும்புகின்றார்கள். பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மீண்டும் பிறப்புண்டானால் சிவனடியாராகவே இருந்து உன்னை என்றும் மறவாமை வேண்டும். அதைவிட வேண்டும் நீ சிவதாண்டவம் ஆடுகின்ற போது உன்னுடைய காலடியின் கீழிருந்து நான் பாடவேண்டும் என்று இறைவனிடம் வரம் கேட்டுப் பாடியவரே காரைக்காலம்மையார்.

காரைக்காலம்மையார் சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்தவர். பாடல்களால் இறைவனைப் பூசித்தவர்.

இவர் பாடிய அற்புதத்திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை போன்ற நூல்களே பல்லவர்கால பக்தி இலக்கியங்களுக்கு அடியெடுத்துக் கொடுத்தது. நாம் வாழுகின்ற இந்த காலகட்டத்தில் இக்காரைக் காலம்மையார் வாழ்க்கை வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்கள் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தாலும் இப்பாடல் வரிகளின் ஆழத்தை நாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

சிறுவயதில் இருந்தே சிவனில் பக்தி கொண்டிருந்த காரைக்காலம்மையார் சிவனடியார்களைச் சிவனெனப் போற்றும் பண்புள்ளவர். அவருக்கு பரமதத்தன் என்னும் வணிகனைத் திருமணம் செய்து கொடுக்கின்றார்கள். ஒருநாள் கணவன் கொடுத்தனுப்பிய இரண்டு மாங்கனிகளில் ஒன்றை பசியோடு வந்த சிவனடியார் ஒருவருக்குக் கொடுத்து விடுகின்றார். கணவனுக்கு உணவு பரிமாறும் போது அந்த மாங்கனியில் ஒன்றை உண்ட பரமதத்தன், அதன் சுவையில் ஈர்ப்படைந்து மற்றைய மாங்கனியையும் தனக்குப் பரிமாறுமாறு கேட்கின்றான்.

காரைக்காலம்மையாரும் சிவனடியாருக்கு அருந்தக் கொடுத்ததை மறைப்பதற்காக இறைவனிடம் வேண்டிநிற்கின்றார். சிவபெருமானின் அருளால் காரைக்காலம்மையாருக்கு ஒரு மாங்கனி கிடைக்கின்றது. அக்கனியைக் கணவனுக்குக் கொடுத்த போது இக்கனி அதிக சுவையுடையதாக இருப்பதை பரமதத்தன் உணர்கின்றான். இக்கனியின் சுவை வேறாக இருக்கின்றதே காரணம் என்ன என்று வினவுகின்றான். இறைவன் அருளால் அம்மாங்கனி கிடைத்ததாகக் காரைக்காலம்மையாரும் சொல்லுகின்றார்.

உடனே பரமதத்தனும் அதனை நிரூபித்துக் காட்டும்படிக் கூறவே இறைவன் அருளால் மீண்டும் ஒரு கனி இறைவன் அருளால் கிடைக்கின்றது. ஆச்சரியம் அடைந்த பரமதத்தனும் தெய்வீகப் பெண்ணுடன் குடும்ப வாழ்க்கை மேற்கொள்ள முடியாது என்ற காரணத்தால் காரைக்காலம்மையாரை விட்டுப் பிரிந்து மதுரைக்குச் சென்று வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து தனக்குப் பிறக்கும் குழந்தைக்கு காரைக்காலம்மையார் பெயரை வைத்து வாழுகின்றான்.

தன்னைப் பிரிந்து சென்ற கணவனை உறவினர் துணையுடன் மதுரைக்குச் சென்று கண்ட காரைக்காலம்மையார் கணவனுக்கு உதவாத இந்த உடல் அழகு தேவையில்லை என இறைவனை வேண்டித் தசை உடம்பு நீத்து என்புடலுடன் கைலாயமலை நோக்கிப் பயணமாகின்றார். அங்கே தலையாலே நடந்து செல்வதைக் கண்ட இறைவனும் அம்மையே வருக. வேண்டும் வரம் கேள் என்று கேட்டபோது இப்பாடலில் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவிக்கின்றார்.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் மனிதனுடைய வாழ்க்கையில் சொர்க்கமும் நரகமும் அடங்கிக் கிடக்கின்றது. மனித வாழ்க்கையை விரும்பாத மனிதன் மீண்டும் பிறக்க வேண்டும் என்ற ஆசையை அடியோடு விட்டுவிடுவான். எமக்கும் மேலே ஒரு உலகம் இருக்கின்றது என்று நம்பும் மனிதர்கள் அங்கே இறைவன் குடியிருப்பதாகவும் இறைவன் காலடியில் தன்னுடைய வாழ்க்கை சென்றடைய வேண்டும் என்றும் நினைப்பார்கள். இதுவே காரைக்காலம்மையார் விரும்பிக் கேட்டதாக அறிகின்றோம். அன்ன ஆகாரமின்றி இறைவனை நினைத்து விரதமிருப்பவர்களுக்கு எலும்பை அண்டியிருக்கும் தசைப்பகுதி குறைவடைவது இயற்கையே. Magersucht என்று ஜேர்மன் மொழியில் சொல்வார்கள். ஆத்மீக யாத்திரை செல்வதற்கு இலகுவான மெல்லிய என்புடலை காரைக் காலம்மையார் இறைவனை வேண்டிப் பெற்றிருக்கலாம். கைலாய மலையை அடைந்ததாகவும் இறைவன் வரம் கிடைப்பதாகவும் கூறப்பட்டுள்ள கதை தற்போதைய Hologram போல் அக்காலத்தில் இருந்திருக்க சந்தர்ப்பம் இருக்கின்றது. இம்முறையிலேயே திருநாவுக்கரசருக்கு சிவபெருமானின் திருநடனக் காட்சி கிடைத்தது.

மாங்கனி கிடைக்கும் நிகழ்வு தற்காலத்தில் நினைத்துப் பார்க்க முடியாது என்றாலும் வேண்டுதல்கள் நேரடியாக இல்லையென்றாலும் மறைமுகமாகவோ வேறு ஒரு சந்தர்ப்பத்திலோ எம்முடைய வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுவதை நாம் இக்காலப்பகுதியில் அநுபவரீதியாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இனிமையான கனி சுவைமிக்கதாக இருந்தால் தன்னைப் போல் தன் மனைவியும் அக்கனியை உண்டு இன்பம் அனுபவிக்கட்டும் என்று நினைக்காத பரமதத்தன்கள் இக்காலப்பகுதியிலும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். காலங்கள் மாறலாம். காட்சிகள் மாறலாம். ஆனால், அடிப்படையில் உலகம் உருண்டு கொண்டுதான் இருக்கின்றது. வாழ்க்கை நிகழ்வுகளும் உருண்டு கொண்டுதான் இருக்கின்றது.

# The Multifarious Ventures of Dr. Aru Thirumurugan



Dr. Aru Thirumurugan

Dr. Aru Thirumurugan is a gift to the Saiva Tamil society in Sri Lanka and abroad. He was brought up with human, religious, social, and cultural values. Along with his growth of age these values too developed remarkably. When he entered the youth hood, he chose to be a bachelor to serve the Saiva Tamil community wholeheartedly. His profession as a teacher and later as a principal enabled him to have a wide and worthy acquaintances in his life. There are many well-wishers and service minded people who supported physically, morally, and financially and still corporate with him to develop the religious, cultural, societal, and humanitarian services in a successful manner.

Recognizing and considering Thirumurugan's multifarious services to the community, the University of Jaffna offered an honorary doctorate title. The University Grant Commission has appointed him as a council member of the Jaffna University for three consecutive years.

Dr.Aru Thirumurugan's religious engagements gradually commenced and got established strongly when he became the President of Dhurka Temple Thevasthanam ,Tellipallai .

Dr. Thangamma Apakutty who did religious discourses from her early life was an ardent devotee of Dhurga Amman . She had devoted her life and services in social and religious services immensely. She assisted and looked after poor and orphaned girls with the help of donors. Dr.Aru Thirumurugan who worked with her dedicatedly, took over this task and continues to do a commendable service to the society.

Dr.Aru Thirumurugan having such experiences was motivated to help the differently abled children in the peninsula. As a result, he established the Sivapoomi School in 2004 with the help of generous donors. The school trains the students to participate in sports, games, and in other activities along with providing education, discipline, and other facilities to the children. The parents are relieved from their worry about their children's education after the establishment of Sivapoomi School.



**Prof.Dr.Shanmugayogini Ravindran**
Department of English Language Teaching
University of Jaffna

Dr.Aru Thirumurugan found the desperate need of the elders neglected by the families or left alone without any caring. He was able to build a Sivapoomi Elders' Home with the Sivapoomi and Manitha Neyam Trust.
Dr.Aru Thirumurugan has been travelling to other countries on invitation to deliver religious speeches. His experiences there and the association of people serving in different sectors gave him monetary strength to build a temple for Lord Thadshanamoorthy in Navatkulli.

He has imported 108 granite Siva lingams, other idols and especially the immense granite Thadchanamoorthy statue.

The travelers from other places and from the peninsula are lucky to worship Guru Thadchanamoorthi in Navatkulli. The Hindus are able to complete their vows and worship during normal days and during festive seasons like New Year and Shivarathri. The holy Thiruvasakam , inscribed on the granitite stone walls of the temple, kindles the bakthi emotion of those who visit it.

In 2018, Mrs. A. Kayilasapillai, Ms. Vaithilingam, Dr. Kandappillai Parthiban and Dr. Nirmalan Mahesan assisted in the construction of the three-storey building of the Museum. The Sivapoomi Trust purchased 120 perches of land on the A9 road in Navtkulli. In the year 2020, Dr. Aru Thirumurugan opened the museum depicting the religious, cultural, economic, and social life style of the Tamils. He named it as Sivapoomi Museum. One can find extraordinary and special objects, ornaments, instruments, olai chuvaddigal, rare books, periodicals, other utensils used by our ancestors for various purposes, wall hangers, furniture , pictures, and paintings etc., .The museum attracts all the people immaterial of age, religion, language and nationality.

Dr. Aru Thirumurugan has established a shelter place for the stray dogs and has made facilities for their food, medicine and other needs.

He has implemented several other projects including Sivapoomi Herbal Gardens in the Peninsula which indicates his exemplary service to the people.
Thus, for more than two decades Dr. Aru Thirumurugan has ventured into numerous social, religious, cultural, and educational activities. He has stamped his feet in the development of serving people and other beings in all forms in many places in Sri Lanka, by giving the titles starting with 'Sivapoomi' along with the name of the new construction.
On his 60th birthday I wish him to extend his services in dedicating his precious life in establishing more branches of Sivapoomi and its several services to the needy ones.
Let the Almighty give him strength in all forms to continue his service with much motivation.





# வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன்

- செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற சிறப்பிற்குரிய கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 10.07.2021 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழா நாளில் மகா எசல பெரகராவுடன் திருவிழா நிறைபெற்றது.

இந்த ஆண்டு கொவிட் நெருக்கடி காரணமாக அனுமதி பெற்ற அடியவர்கள் சிலருடன் மாத்திரம் திருவிழா இடம்பெறவுள்ளதாக மொனராகல மாவட்டச் செயலர் குணதாச அமரசிங்க ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

சைவப் பெருமக்கள் ஆடித் திருவோணத்தை கதிர்காமத் தீர்த்தநாளாகக் கொண்டு வழிபாடாற்றும் வழக்கத்தைக் காலம் காலமாகக் கைக்கொண்டு வருகின்றனர்.

கதிர் என்பது ஒளியைக் குறிக்கிறது. காமம் என்பது அன்பு என்ற பொருளைத் தருகின்றது. கம என்ற சொல் கிராமத்தைக் குறிப்பதாகக் கூடக் கொள்ளலாம். வேலவனின் கிராமம் - கதிர் வேலவனின் அன்புக்குரிய தலம் என்ற பொருள்களில் கதிர்காமம் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகின்றது.

முருகப் பெருமான் வேடர் குலப் பெண்ணாகிய வள்ளிநாச் சியாரைக் கரம்பற்றிய தலமாகக் கதிர்காமத்தைக் கொள்வர். வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உறை வோனே என்று அருணகிரியார் பாடுவதையும் இங்கு சுட்டலாம்.

தற்போதுள்ள கதிர்காம ஆலயத்தை 1634ஆம் ஆண்டு இரண்டாம் இராஜசிங்கன் கட்டியதாக அதன் வரலாறு தெரிவிக்கின்றது. வன வேடர் பூசை செய்யும் சிறப்புப் பெற்றதால் அவர்கள் வழி வந்தோர் இன்றும் பாரம்பரியம் காத்துப் பூசை செய்யும் மரபைப் பேணுகின்றனர். இவர்கள் சிங்கள மொழி பேசுபவர்களாக இருப்பதால் சிங்கள மக்கள் சார்ந்த பாரம்பரியமே கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் தற்போது நடைமுறையில் காணப்படுகின்றது. கந்தபுராணத்தில் குறிப்பிடப்படும் ஏமகூடமே கதிர்காமம் என்ற நம்பிக்கை சைவர்களிடையே உண்டு. முருகப் பெருமான் சூரபன்மனை சங்கரிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்று மாணிக்க கங்கை அருகில் பாசறை அமைத்துத் தங்கியிருந்ததாக புராணச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இலங்கையில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சங்கமித்து வழிபாடாற்றும் தலமாகக் கதிர்காமம் விளங்குகின்றது. வடக்கு கிழக்கில் இருந்து கால் நடையாக பாத யாத்திரையாகப் பக்தர்கள் கதிர்காமம் செல்வது வழக்கம். யாழ்ப்பாணத்தில் இருந்து ஐம்பது தொடக்கம் அறுபது நாள்கள் நடந்து பாத யாத்திரை செல்லும் வழக்கம் கொவிட் பேரிடர் காலத்திற்கு முன்பும் காணப்பட்டது. யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதியில் இருந்து புறப்பட்டு முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்களப்பு உகந்தை ஜால வனம் என மிக நீண்ட பாதையூடாக அடியவர்கள் பயணம் செய்வர். தமது யாத்திரையின் போது முருகனும் கூட வருவதாக நம்பிக்கை கொள்வர்.

**ஆச்சி பயணம் போகிறாள்**

கதிர்காமக் கந்தனின் சக்திக்கு ஆட்பட்ட யாழ்ப்பாணத்தவர்கள் பல ஊர்களில் சின்னக்கதிர்காமம், செல்லக் கதிர்காமம், பாலகதிர்காமம் எனக் கதிர்காமத்தின் பெயரில் ஆலயங்களை அமைத்து வழிபடுகின்றனர். ஈழத்தின் முதற்பள்ளுப் பிரபந்தமாக விளங்கும் கதிரைமலைப்பள்ளு கதிர்காமக் கந்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்த நூல் ஆகும். செங்கை ஆழியான் எழுதிய ஆச்சி பயணம் போகிறாள் என்ற நாவல் - கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கச் செல்லும் வயோதிப மாது ஒருவர் பற்றிய கதை என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. அருணகிரியார் இலங்கை வந்து கதிர்காமக் கந்தனைத் தரிசித்திருக்கலாம் என்ற நம்பிக்கையும் உண்டு.

வடக்கில் யாழ்ப்பாணாயன் பட்டினம் மருவிய பெருமாளே என நல்லைக் கந்தனைப் பாடி பின் கால் நடையாகப் பயணம் செய்யும் வழியில் திருகோணமலைப் பெருமான் மீது பாடி கதிர்காமக் கந்தன் மீது பல பாடல்களைப் பாடி அருணகிரியார் பக்தி செய்துள்ளார்.

**“மருவும் அடியார்கள் மனதில் விளையாடும்**
**மரகத மயூரப் பெருமாள்**
**மணிதரளம் வீசி அணி அருவி சூழ**
**மருவு கதிர்காமப் பெருமாள்“**

என அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

அருணகிரியாருடைய திருப்புகழை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது மாணிக்கத்தால் செய்த விலை மதிக்கமுடியாத திருவுருவம் இந்தத் தலத்தில் இருந்திருத்தல் வேண்டும் எனக் குல. சபாநாதன் குறிப்பிடுகின்றார். கதிர்காமத்தைத் தரிசித்த டொக்டர் டேவி அவர்கள் 'பெருங்கலவரம் நிகழ்ந்த காலத்தில் முருகனின் திருவுருவம் காட்டில் மறைக்கப்பட்டு விட்டதாகச் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.



தற்போது கதிர்காமக் கந்தனாக நாம் தரிசிக்கும் பெருமான் ஆறுமுக வேலவர் வள்ளி தெய்வயானையுடன் மயில் மீது அமர்ந்து அடியார்களுக்கு அருள்புரியும் காட்சியாக சித்திரத்தில் வரையப்பட்ட திருக்கோலம் ஆகும். திரைச்சீலை வடிவில் பெருமானைத் தரிசித்தி பக்தி கொள்ளும் சிறப்பு இத்தலத்திற்குத் தனித்துவமானது.

கதிர்காமக் கந்தனின் பெருந்திருவிழா நடைபெறும் 15 அல்லது 16 நாள்களும் கடுமையாக விரதம் இருந்து வழிபாடாற்றும் மரபு சைவத் தமிழர்களிடம் காணப்பட்டது. கோவிலுக்கும் சைவத்தமிழ் மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் நலிவுற்றுள்ளமையால் இன்று விரதம் அனுட்டித்து வழிபாடாற்றும் சைவத் தமிழ் பக்தர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது.
வடக்கு தெற்கு உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பவல்ல புனிதத் தலமாக கதிர்காமம் விளங்கும் நிலையில் - முன்னைய கால நடைமுறைகளைத் தமிழ் மக்கள் கைக்கொள்ளும் வழி ஏற்படுத்தப்பட வேண்டும். இன நல்லிணக்கத்திற்கான வழியையும் இந்தத் திருவிழா ஏற்படுத்திக் கொடுக்கும்.




## நெஞ்சமெலாம் சிவம் வாழ்க என்றே வாழும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்



நெஞ்சம்நிறை வாழ்த்திசைத்தோம் - வாழ்க ஐயா
நெஞ்சமெலாம் சிவம் வாழ்க என்றே வாழும்
நேசமுடை செஞ்சொற்செல்வர் இனிதே வாழ்க
குஞ்சரத்தான் இளவலது பெயரைக் கொண்டே
குவலயத்தார் சைவநெறி போற்ற வைக்கும்
விஞ்சுபுகழ் கொண்ட எங்கள் திருமுருகனார்
வியன்மணி விழவு கண்டார் போற்று கின்றோம்
துஞ்சலின்றி நமக்காக நெடிது உழைக்கும்
தூயநின் பணியோங்கி வாழ்வீர் ஐயா

**செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்**
பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

# " தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் "

## மணி விழா நாயகன் செஞ்சொற் செல்வர் கலாநிதி திரு ஆறு திருமுருகன் அவர்கள்






தெல்லிப்பழை என்று சொல்கின்ற போது அங்கு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீதுர்க்காதேவியின் அருட்காட்சி எம்மவர் அகத்தில் என்றும் நீங்காத இடம் பெற்றிருக்கும். கருவறையும், வசந்த மண்டபமும்,நான்கு திசைகளிளும் அமைந்துள்ள அழகிய இராஜகோபுரங்களும், பிரகாரங்களும் எமது உள்ளத்தை என்றென்றும் ஈர்க்கும் சக்தி வாய்ந்தவை.

இவ் ஆலயத் தொண்டை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அமர்ர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் தலைமைத்துவத்தின் கீழ் தொண்டாற்றி அவரது மறைவுக்குப் பின்னர் இத் தலைமத்துவத்தை தான் பொறுப்பேற்று அம்மையார் விட்டு சென்ற இப் பெரும் பொறுப்பை இன்று வரை மிகவும் சிறப்பாக ஆற்றி வருபவரும்,அறிவு மேம்பாடும், பக்தி மேம்பாடும். ஒரு சேரப் பெற்ற மாமனிதர் திரு ஆறு திருமுருகன் அவர்கள்.

இவ் 2021ம் ஆண்டில் அகவை அறுபதில் மணி விழாக் காணும் மாண்புறு க்கள் மைந்தன், மாமனிதர், சிவத்தமிழ் செல்வியின் வாரிசாக, தன் வாழ் நாட்களை அன்மீக,சமுதாய சேவைக்காக ஆற்றி வரும் மக்கள் சேவையாளனது பாராட்டுதற்குரயது.
இவரது ஆன்மீகப் பணியும்,பொதுப் பணியும் சிறப்புற்று விளங்கின்றமைக்கு ஈழத்து சைவ தமிழ் மக்கள் அவர் மேல் கொண்டுள்ள உயர்ந்த பற்றுக்கு உதாரணமாகும்.

இவர் "சிவபூமி"என்னும் அற்க்கட்டளை அமைத்து கடந்த பல ஆண்டுகளாக அற்றி வருகின்ற மனிதநேய,சமுதாய பணிகள் முலம் இளைஞர்கள் தொடக்கம் முதியோர்கள் வரை பயனடைந்து வருகின்றார்கள்.

வையத்துள் பிறப்போர் பல்லாயிரம் பேர் அவர்களில் ஒரு சிலர் மட்டுமே தம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற உணர்விற்கு உறை விடமாகி விடுகின்றர்கள்.



**" தொண்டர் திலகம்"**
**வ.இ.இராமநாதன்**
இங்கிலாந்து

இச் சிலரில் " செஞ்சொற் செல்வர்" கலாநிதி திரு ஆறு திருமுருகன் அவர்கள் முதன்மையானவர்,அவர் ஆற்றிய, ஆற்றிவரும்,ஆற்றப் போகும் ஆன்மீக,சமுதாய பணிகளுக்கு நாம் அனைவரும் நன்றி கூறி மகிழ்ந்து அன்னார் நலமாக நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.




# யாழ்பாணத்து இந்து சமுதாயத்தில் பெண் கல்வி

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டின் கல்வி தரத்தில் தங்கியுள்ளது. கீழைத்தேய, மேலைத்தேயச் சிந்தனை யாளர்கள் ஒரு பெண்ணுக்கு வழங்கப்படுகின்ற கல்வி குடும்ப அங்கத்தவர்கள் பலருக்கு பயனளிப்பதாக கருதுகின்றனர். கல்வியின் நோக்கம், விழுமியங்கள் நாட்டுக்கு நாடு, காலத்திற்கு காலம் மாறிக் கொண்டே வந்துள்ளன என்பதனை வரலாறுகள் எடுத்துக்காட்டியுள்ளன.[1] யாழ்ப்பாண இந்து சமூகத்தில் பெண்கள் கல்வியிலும் பண்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டனவா? என்பதை அறிவதற்கு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. உலக நாடுகள் மற்றும் இலங்கையின் பல பகுதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கிற்கு இணங்க யாழ்ப்பாண இந்துப் பெண்களின் கல்வி நிலைமைகளிலும் காலமாற்றத்தோடு முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டனவா என்பதனை அறியும் வகையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்து யாழ்ப்பாணப் பெண் கல்வி நிலைமைகளும் பண்பாடுகளும் அதனோடு பிரித்தானியர் காலப் பெண்களின் கல்வி முயற்சிகளும் பண்பாடுகளும் நிறுவன ரீதியியான வளர்ச்சிகளும் குறிப்பிடத்தக்கவை.

யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியம் மிகவும் தொன்மையானது. கல்வியானது பாரம்பரியத்துடன் ஒன்றினைந்த அம்சமாகும். மக்களிடம் இரண்டறக் கலந்தது கல்வி என்று சொல்லும் அளவிற்கு யாழ்ப்பாணத்தவர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். வரலாற்றுக் கூடாகப் பார்க்கும் போது, யாழ்ப்பாணத்து மக்கள் தம்மை ஒறுத்தேனும் கல்வியை வளர்க்கும் தன்மை உடையவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது. காலத்துக்கு காலம் யாழ்ப்பாண கல்வி மரபிலே பல வகையான மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன என்பதை செவிவழிக்கல்வி, தமிழ் இலக்கிய மரபு, புராணபடன மரபு, குருகுலக்கல்வி மரபு என்பவற்றினூடாக ஓரளவு அறிய முடிகிறது.

கல்வியில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றம் காரணமாக யாழ்ப்பாண இந்து சமூகத்தில் சமூக அந்தஸ்தானது பொருளாதார வளத்தினால் மட்டும் தீர்மானிக்கப்படாமல் பெற்ற கல்வியின் தரத்தையும் இணைத்த வகையில் தீர்மானிக் கபட்டமையால் யாழ்ப்பாண இந்து சமூகத்தில் ஆண், பெண் வேறுபாடு இல்லாத வகையில் கல்வி முக்கியமான இடத்தை பெறுகின்றது. பெண் கல்வியளாளர்கள் யாழ்ப்பாண இந்து சமூகத்தில் பண்பாட்டு ரீதியாக பாரியளவு பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். அத்தோடு ஆண்களும் பெண்களின் கல்வியில் ஆர்வமும் அக்கறையும் காட்டியுள்ளனர்.

.இலங்கையின் பல பகுதிகளில் இருந்து பெண்கல்வி தொடர்புடைய நூல்கள் மற்றும் கட்டுரைகள் பல வெளி வந்துள்ளன. சசிகலா குகாமூர்த்தியின் யாழ்ப்பாணத்தில் பெண்கல்வியின் தோற்றமும் வளர்ச்சியும் (2012) எனும் நூலில் பண்டைய யாழ்ப்பாண தமிழ் மரபிலே பெண் கல்வி, போர்த்துக்கேயர் வருகையும்,

யாழ்ப்பாணத்து தமிழ் பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும், ஒல்லாந்தர் வருகையும் தமிழ் பெண்களின் கல்வி மரபு மாற்றங்களும்,பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி நிலைமைகள் தொடர்பாக ஆராயப் பட்டுள்ளது.



**அ.வியாசன்**
மாணவன் இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

விக்னேஸ்வரி பவநேசனின் இந்துப்பண்பாட்டு மரபில் பெண்கள் நிலை சிறப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன இந்து சீர்திருத்த இயக்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வில் (2002) இந்துப்பண்பாட்டில் பெண்கள் பற்றிய சிந்தனை மரபு, இந்துப்பண்பாட்டு மரபில் பெண்கள் நிலை வரலாற்று ரீதியாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த ஆய்விலே இலங்கையின் பெண் நிலை தொடர்பாகவும் கூறப்பட்டுள்ளது.

1. சீமாட்டி லீலாவதி இராமநாதன்
2. மங்களம்பாள்
3. தம்பு வேதநாயகி
4. இரத்தினா மா நவரத்தினம்
5. பத்மாசனி இராஜேந்திரம
6. தங்கம்மா அப்பாக்குட்டி
7. மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம்
8. பத்மா சோமகாந்தன்

வள்ளிநாயகி இராமலிங்கம் யாழ்ப்பாண சமூகத்தில் பெண் கல்வி ஓர் ஆய்வு. (2006) எனும் நூலில் யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப் பாராம்பரியம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இந் நூலில் பார்வதியம்மையார், மங்களாம்பாள் போன்ற பெண் கல்வியலாளர்கள் பற்றிய தகவல்களை கூறுகிறது.

எஸ்.சிவலிங்கராஜா பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்து தமிழ்க்கல்வி (2001) எனும் நூலில் 19ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்து தமிழ்க்கல்வி மரபு தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

மனோன்மணி சண்முகதாஸ் சைவத் தமிழ் பண்பாட்டில் பெண்மையின் செல்நெறி எனும் சிவத்தமிழ்ச்செல்வி வாசகம் (2010) நினைவுமலரின் ஆய்வுக்கட்டுரையில் யாழ்ப்பாணத்து சமயச் சூழலும் நாலவரும் என்ற தலைப்பில் நாவலர் எழுதிய உரைநடை நூல்கள், பாலபாடம்,சைவவினா விடை போன்ற நூல்கள் பெண்கள் இலகுவில் கற்க கூடிய நூல்களாக இருந்தன. நாவலருடைய யாழ்ப்பாண சமயநிலை ஆதாரம் காட்டியுள்ளனர்.

இக் கட்டுரையில் துர்க்காதுரந்தரியின் பணியும் பெண்மையில் செல்நெறி என்று தங்கம்மா அப்பாக்குட்டியின் கல்விப்பணிகள் ஆராயப்பட்டுள்ளது.

கலைவாணி இராமநாதன் சைவப்பண்பாட்டு பாரம்பரியத்தில் யாழ்ப்பாண மகளிரின் பங்கும், பணியும் எனும் சிவத்தமிழ்ச் செல்வி வாசகம் (2010) நினைவு மலரின் ஆய்வுக் கட்டுரையில் தெரிவு செய்யப்பட்ட பெண்களின் இந்துப்பண்பாட்டில் பங்களிப்பு தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரி பவநேசன் இலங்கையின் சமய சமூக வளர்ச்சியில் முன்னோடிகளான சில இந்துப் பெண்கள் எனும் சிவத்தமிழ் வாசகம் (2010) நினைவு மலரில் மங்களாம்பாள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, லீலாவதி, வசந்தா வைத்திய நாதன் போன்ற பெண்களின் கல்விப்பணிகளை அறிய முடிகிறது.

எஸ்.சிவலிங்கராஜா யாழ்ப்பாணக்குடா நாட்டில் 19ம் நூற்றாண்டில் நிலவிய பாரம்பரிய கல்விமுறை எனும் ஆய்வுக்கட்டுரையில் பாரம்பரிய கல்விமுறைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. மேலும் ஆரம்பகாலத்தில் பெண்கல்வி முக்கியம் பெறவில்லை என சுட்டுகின்றனர். அதாவது மிஷனரிமார் வந்த காலத்தில் படித்த ஆடவர்கள் ஆங்காங்கே காணப்பட்டாலும் படித்த ஸ்திரிகளை காண்பது அரிதாம் ஆதி அமெரிக்க மி'னரிமார் யாழ்ப்பாணம் வந்தபோது (1816) யாழ்ப்பாண குடாநாட்டில் பாடி நடனஞ் செய்யும் நாட்டியம் செய்யும் நடனப் பெண்களினை விட இரண்டு சுதேசப் பெண்களுக்கு மாத்திரம் வாசிக்க எழுதத் தெரியும் என்று அம்மிஷனரிமார்களுள் ஒருவர் எழுதியிருக்கிறார்.
அக்காலத்தில் பெண்பிள்ளைகள் படித்தல் மரபன்று எனக்கருதப்பட்டது இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது. பெண்கள் தொடர்பாக மேற் கூறப்பட்ட தகவல்கள் வரலாற்று ரீதியாக ஆராய்வதற்கு பயன்படுத்த கூடியதாக உள்ளது.

கல்வி மனிதனைப் பூரணமடையச் செய்கின்றது. இந்த வகையில் மனிதனை முழுமையடையச் செய்வதில் கல்வியின் முக்கியத்துவம் அறியப்பட்ட விடயமாகும். கல்வி மனிதனை முழுமை அடையச் செய்வதனால் ஆண், பெண் என்ற பால் வேறுபாடு இன்றி கல்வியை, வாழ்க்கையில் இருபாலாரும் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் நன்கு உணரப்பட்டுள்ளது. மனிதன் சமூகப்பிராணி என்ற வகையில் சமூகத்தின் பண்பாடு, கலை, கலாசாரம், மரபுகள், சம்பிரதா யங்கள், வாழும் பிரதேசத்தின் வழமைகள் என்பவற்றின் கட்டுபாட்டிருலிருந்து, மனிதன் முழுமையாக விடுபட்டு வாழ முடியாதவன். இந்த வகையில் சமூகமானது ஆண்களை விட பெண்களுக்கு மேலதிகமான பல கட்டுப்பாடுகளை வைத்திருந்தது என்பததை விசேடமாக யாழ்பாணத்தின் பண்டைய சமூகத்தின் கட்டுக்கோப்புகளின் வாயிலாக அறிய முடிந்தது.
யாழ்பாணத்து இந்துப் பெண்கள் வாய்மொழி மூலமாக அறச்சிந்தனைகளையும் ஆன்மீக கல்வியை கற்று வந்தனர்.

## நிலா முற்றத்து கல்வி பண்பாடு

நிலா முற்றத்து கல்வி பண்பாடு நீண்டகாலமாக எமது சமூகத்தில் இருந்தது. என்பதை அறிய முடிகிறது. அதாவது இரவில் நிலவு ஏறிக்கும் சூழலில் முற்றத்து வெளியில் புராணக் கருத்துக்களை ஒருவா் சொல்ல கூட்டுக்குடும்பமாக உறுப்பினா்கள் கற்றுக்கும் பண்பாடு நிலவியதை யாழ்பாணப் பெண்கல்வி பாரம்பாரியத்தை அறிந்த பதிவுகளாக காணப்படுகின்றது.

கிறிஸ்தவ மிஷனரிகள் ஆங்கிலேயர்களின் ஆட்சிகாலத்தில் பல இடங்களில் பாடசாலைகளை தோற்றுவித்து பெண்களுக்கும் கல்வி வழங்கினர். எனினும் அவர்களது பாடசாலை கற்றவர்கள் மத மாற்றத்திற்கு உள்ளனர். தென்கிழக்காசியாவில் விடுதிச்சாலையுடன் 1824 ஆம் ஆண்டு உடுவில் மகளிா் கல்லூரி உருவாக்கபட்டதாக வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்துப் பெண்கள் மதம்மாறி ஞானத்தனம் பெற்று கற்றுவந்தனர். அமெரிக்கமி'ன் பாடசாலைகள், றோமன் கத்தோலிக்க பாடசாலைகள் போன்ற கிறிஸ்தவ பாடசாலைகள் பெண்களுக்கு கல்வி வழங்கிய போதிலும் அவையாவும் மதமாற்றம் நோக்கில் செயற்பட்டன. பெண் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை மிஷனரி வழங்கியது. அவர்களையும் மதம் மாறவேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் வெஸ்லியன் கல்லூரி இன்று யாழ்பாணம் மத்திய கல்லூரியாக திகழ்கின்றது. ஆரம்பத்தில் வெஸ்லியன் கல்லூரியில் பெண்கள் படிப்பதற்கு வந்த போது கல்லூரி வளாகத்தின் வேப்பமரத்தின் கீழ் கல்வி வழங்கப்பட்டது. அப்படி கல்வி வழங்கிய இடமே வேம்படி மகளிா் கல்லூரியாக மாற்றம் பெற்றது. அக்காலத்தில் படிப்பதற்கு பெண்கள் மதம் மாறவேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறன சூழ்நிலையில் நாவலரின் பாடசாலை திட்டத்தின் கீழ் சைவபிரகாச வித்தியாசாலை கிராமங்கள் தோன்றும் தோற்றுவிக்கப்பட்டது. மேலும் பெண்களுக்கான அனுமதி வழங்கப்பட்டதை அறியமுடிகிறது.






T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்
ஆடை அணிகலன்கள் மற்றும்
உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து
தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Wolbecker Str.27
48155 Münster
Tel: 0251 13 65 194

கலாநிதி ஆறு.திருமுருகனின்
மணிவிழா சிறக்க
வாழ்த்துகிறோம்.





# பெண்களின் கல்வி வளர்ச்சியில் கலாநிதி ஆறு திருமுருகனின் வகிபங்கு...

நாவலது ஊக்குவிப்பாள் 1913 ஆம் ஆண்டு சேர். பொன். இராமநாதன் அவர்களால் விடுதிச்சாலையுடன் கூடிய மருதனார்மடம் -இணுவில் பகுதியில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் தோற்றுவாய் பின் பெண்கல்வியில் மறுமலர்ச்சி எற்பட்டது. விடுதிச்சாலையில் ஆறு இல்லங்களில் 700 மேற்பட்ட பெண்கள் தங்கி இருந்து கற்றனர். இங்கு பெண்களுக்கான ஆசிரியர் கலாசாலை, மணையியல் வகுப்பு, தையல், கைவேலை வகுப்பு, பண்ணிசை, கர்நாடக சங்கீத வகுப்புகள் நடைபெற்றன. 1964ம் ஆண்டு இலங்கையில் பாடசாலைகள் தேசிய மயமாக் கப்பட்ட போது மிஷனரி மதமாற்ற வலு குறைவடைந்தையும் அறியமுடிகிறது.

இந்துப்பெண்கள் பற்றிய விழிப்புணர்வுகள் இருபதாம் நூற்றாண்டில் ஏற்படுவதற்கும் சமூக நிலையில் மேம்பாடு அடைவதற்கும் வாய்ப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன சீர்திருத்தங்களது செயற்பாடுகளே அடித்தளம் இட்டன என்பது உண்மையாகும். இவ்வாறு இருபதாம் நூற்றாண்டுக் காலத்து வளர்ச்சி நிலைகளை நாம் பார்க்கின்ற போது தான் பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன சீர்திருத்தங்களது செயற்பாடுகளுடைய பலாபலன்களை திடமாக மதிப்பீடு செய்து கொள்ளமுடியும். என்பது தெளிவாகின்றது. குறிப்பாகப் பெண்ணியம் என்ற உலகளாவிய நிலை சார்ந்த ஒரு கண்ணோட்டமும் பெண்களுடைய நலனுக்காக சமூக நிறுவனங்கள் எழுச்சி பெறுவதற்கும் இதன் வழி வாய்ப்பு ஏற்பட்டமைக்கும் பெண்கள் மீது அக்கறை கொண்ட படித்த வர்த்தகத்தவர்களது செயற்பாடுகளே காரணமாக அமைந்தன.

என்பதும் இத்தகைய ஒரு பிண்ணியில் தான் யாழ்ப்பாணத்து இந்துப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு பெண்கள் பலர் முன்னின்று உழைத்தனர் என்பதும் இவர்களது வரிசையிலே சீமாட்டி லீலாவதி இராமநாதன், மங்களம்பாள், இரத்தினா மா நவரத்தினம், பத்மாசனி இராஜேந்திரம், தம்பு வேதநாயகி, தங்கம்மா அப்பாக்குட்டி, மங்கையற்கரசி சிற்றம்பலம், பத்மா சோமகாந்தன் போன்றவர்களின் பணிகளால் ஏனைய பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தன என்பது ஐயமில்லை. கல்வியில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றம் காரணமாக நவீன காலத்தில் பெண்கள் பெற்ற கல்வியறிவின் மூலம் அரசியல், கவ்வி, விஞ்ஞானம், மருத்துவம், கலை, பொருளியல் துறைகளில் உச்ச நிலையில் அடைந்துள்ளனர்.

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் இந்து சமய சமூக வளர்ச்சிக்கு கலைவாணி இராமநாதன், மனோன்மணி சண்முகதாஸ், சாந்தி நாவுக்கரசன், நாச்சியார் செல்வநாயகம்,சுகந்தினி ஸ்ரீ முரளிதரன், விக்னேஸ்வரி பவநேசன் போன்ற இந்துபெண்கள் எடுத்துக் காட்டுக்காக விளங்குகின்றனர். மேலும் சமகாலத்தில் பெண்களின் கல்வி வளர்ச்சியில் கலாநிதி ஆறு திருமுருகனின் வகிபங்கு குறிப்பிட்டதக்கது.




துர்க்காபுர மகளீர் இல்லத்தில் இருந்து கல்விகற்கும் மாணவிகளுக்கு, திருமணம் செய்துவைத்து,பின்னர் அவர்கள் வாழ, வீடும் கட்டிக்கொடுக்கும் அரும்பணியும் அறு.திருமுருகன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணி சிறக்க பல சமூகசேவையாளர்கள் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்த்தானத்திற்கு கைகொடுத்து உதவிவருகின்றனர்.



**திருமந்திரமும் ஆறு.திருமுருகனும்**

திருமந்திரம் மூவாயிரம் பாடல்களும் கருங்கல்லில் பதிக்கும் திருப்பணி ஆரம்பம்.
சைவத்தின் காவலர்
ஆறு.திருமுருகனார் ஐயாவின் மற்றொரு சைவப்பணி திருமந்திரம் மூவாயிரம் பாடல்களும் கருங்கல்லில் பதிக்கும் திருப்பணி ஆரம்பம்.




### சாந்தநாயகி சமேத சந்திரமௌலீவரஆலய குருவின் ஆசிகள்!

எமது பெருமதிப்புக்குரிய சிவதொண்டன் சிவபூமி அமைப்பின் மூலம் தாயகத்தில் முதியவர்கள் முதல் மாணவர்கள் வரை அரும்பெரும் பணியாற்றும் ஆறு.திருமுருகன் அவர்களை வாழ்த்தி,ஆசீர்வதிக்கின்றோம். தமிழ்க்கடவுளாம் திரு முருகனின் நாமம் கொண்ட ஆறு.திருமுருகன் இறையருள்சேர இன்னும் பல நற்பணிகள் புரிய வாழ்த்துகின்றோம். அவரோடு இணைந்து பயணிக்கும் தொண்டர்களையும் மனமாரவாழ்த் துவதுடன்,சிவத்தமிழ் சஞ்சிகை மணிவிழா சிறப்பிதழாக இன்று வெளிவருவது கண்டு எமது மகிழ்வையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிவஸ்ரீ. சாமி. தெய்வேந்திரகுருக்கள். ஸ்ரீமதி. விமலேஸ்வரி அம்மா. டோட்மூண்ட். யேர்மனி**

### அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஆறு.திருமுருகன் ஐயா அவர்களின் மணிவிழாவை அறிந்து மிகவும் ஆனந்த மடைகின்றோம்.

ஆறுதிருமுருகன் ஐயாவின் பல திருப்பணிகள் சிவபூமியை செழிப்படையவைக்கின்றன. குறிப்பாக கீரிமலையிலே முதியோர் இல்லம் அமைத்து நம் பெரியோர் களைக்காத்து வரும்பணி அறப்பணியன்றோ! அதுமட்டுமன்றி சிவபுராண அரண்மனைக்கு ஈடு இணையில்லை. இன்னும் எத்தனையோ பெரு விழாக்களைக் கண்டு சீரோடும் சிறப்போடும் ஆனந்தமாக வாழவேண்டும் என்று இந்நேரத்தில், ஹம் சிறி காமாட்சி அம்பாளின் திருவருளும் குருவினது அருளும் கிடைக்க வேண்டு மென்று பிரார்த்தித்து நமது ஆசியையும் வழங்குகின்றோம்.

**ஹம் சிறி காமாட்சிஅம்பாள் ஆலய ஆதீனகர்த்தா**
**பக்குவத்திருமணி சிவஸ்ரீ ஆறுமுக. பாஸ்கரக்குருக்கள். யேர்மனி**

### சிறந்த சிவபக்தன்

"சிவத்தமிழ்செல்வி" தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நேரடிச்சிஷ்யனும், சிறந்த சிவபக்தனும், சைவத்துக்கும் தமிழுக்கும் உடல், பொருள், ஆவி,சிந்தனைகளால் அருந் தொண்டாற்றி பல்லோராலும், போற்றப்படும், எமது பெருமதிப்புக் குரிய செஞ்சொற்செல்வர். கலாநிதிஆறு.திருமுருகன் ஐயா அவர் களின் "மணிவிழாச்சிறப்பிதழாக" "சிவத்தமிழ்" சஞ்சிகை வெளி வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். அப்பெரு மகனார்க்கு எமது மனமார்ந்த நல்லாசிகளும், நல்வாழ்த்துகளும் உரித்தாகுக.
இவ்வண்ணம்.**கணேச-சாமிநாதக்குருக்கள்,Wuppertal,Germany.**

### வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா ஆலய குருவின் ஆசிகள்

ஐரோப்பிய நாட்டில் சிவத்தமிழ் சஞ்சிகை வெளிவருவதே மிகப்பெரிய சிறப்பு இதில் அறு.திருமுருகன் அவர்களின் மணிவிழா சிறப்பாக நிகழ அன்னை ஸ்ரீ நவதுர்க்கா தேவியின் திருவருளோடு நல்லாசிகள் வழங்கி நல்வாழ்த்துகள் கூறி அமைகின்றேன்
**சோ. ராஜாகுருக்கள்- ஸ்ரீ நவதுர்க்கா ஆலயம்**

### செஞ்சொற் செல்வருக்கு சிவத்தமிழ் எடுக்கும் மணிவிழா

சிவனையும் தமிழையும் தாங்கி பல்லாண்டுகாலம் வெளிவந்து கொண்டு இருக்கும் "சிவத்தமிழ்" சஞ்சிகை இம்முறை எமது ஈழநாட்டில் அரும்பணிகள் ஆற்றிவரும் அறு. திருமுருகன் ஐயா அவர்களின் மணிவிழா சிறப்பிதழாக வெளிவரவிருப்பதை அறிந்து மிகமனமகிழ்வடைகிறேன்.இன்னும் பல்லாண்டுகாலம் சிவத் திற்கும் தமிழுக்கும் "சிவத்தமிழ்" அரும்பணிகள் ஆற்ற சிவத்தமிழை அன்புடன் வாழ்த்துகிறேன்.
**"துர்க்காபூஜாதுரந்தரர்" சிவஸ்ரீ ஜெயந்திநாதக்குருக்கள்**
Schwerte,Germany

### சிவபூமியை அடையாளப்படுத்தியவர் கலாநிதி ஆறு.திருமுருகன்!

உலக அரங்கில் சிவபூமியை அடையாளப்படுத்தக்கூடிய சொற் பொழிவாளர் என்ற பெருமையைக் கொண்டவரும், சொற்பொழிவின் மூலம் சமூகப் பணிகளை ஊக்குவிக்கலாம் என்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் வழி நடப்பவரும் இவர். இவரது சமூகப் பணிகளைக் கௌரவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 2011 ஆம் ஆண்டில் கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவரது மணிவிழாவினை புலத்திலும் கொண்டாடும் சிவத்தமிழ் சஞ்சிகைக்கும் வெற்றிமணி பத்திரிகைக்கும் எமது வாழ்த்தும் நன்றியும் உரித்தாகட்டும்.
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர குருவாயூரக் குருக்கள் குறிஞ்சிக்குமரன் ஆலய பிரதம குரு. குமஸ்பார்க்-யேர்மனி**


திரு. வயித்திலிங்கம் கதிர்காமத்தம்பி

சிவத்தமிழ் தரணியில்
"அகமும் புறமும் ஆலயம் அமைத்து" உலகம் செழிக்கும் வண்ணம்
என்றும் மலர வாழ்த்துகின்றோம்.
இவ்விதழ் கலாநிதி ஆறு. திருமுருகனின் மணிவிழா
சிறப்பிதழாக மணம் பரப்புவது கண்டு மகிழ்கிறேன்,
வாழ்த்துகிறேன்.

**திரு. வயித்திலிங்கம் கதிர்காமத்தம்பி**
தலைவர், தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம்,
றோர்மொண்ட்,நெதர்லாந்து




கலாநிதி ஆறு.திருமுருகனின் மணிவிழா சிறக்க வாழ்த்துகிறோம்.



உங்கள் வீட்டின் பூஜை அறை
அழகுற அமைக்க நாடுங்கள்
உங்கள் வீட்டின் பூஜை அறையை அலங்கரிப்பதற்கு
நீங்கள்,விரும்பிய வடிவங்களில்,தேவைக்கேற்ப அளவுகளில் முற்றிலும் மரத்தாலான
பூஜை மண்டபங்கள்.சிற்ப வேலைப்பாடுகள் கொண்டது.
லண்டன், மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்
சிவத்தமிழ் இதழ் 35 -2022
தொடர்புகளுக்கு ஜெயகாந்தன் : 00447467141702